
விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண் போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


பக்கங்கள்: இருபது
சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 02 திங்கட்கிழமை (18.07.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 211

## இலங்கை விவகாரம் குறித்து
# அமெ. இராஜாங்க செயலர் கிலாரி
# பிரதமர் மன்மோகன் உடன் பேசுவார்



(கொழும்பு)

அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் கிலாரி கிளின்டன் இந்தியாவுக்கு விஜயம் செய்யும் போது பிரதமர் மன்மோகன் சிங்குடன் இலங்கை விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக கொழும்பு ராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (20ஆம் பக்கம் பார்க்க)



## உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி
### தேர்தல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபை தேர்தல்களுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

65 உள்ளூராட்சி சபை தேர்தல்களில் ஐந்தாயிரத்து 688 வேட்பாளர்கள் போட்டியிடும் அதேவேளை 875 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

இந்தத் தேர்தலில் பங்குகொள்ள 26 இலட்சத்து 30 ஆயிரத்து 975 வாக்காளர்கள் வாக்களிக்கும் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று யாழ்ப்பாணம் வருகிறார்



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார். யாழ்ப்பா ணத்திற்கு வருகைதரும் அவர் யாழ்ப்பாணத்தில் 5 நாட்கள் தங்கியிருந்து பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களை ஆரம்பித்து வைப்பார் என ஜனாதிபதி செயலக வட் டாரங்கள் தெரிவித்துள்ளன.

இன்று யாழ்ப்பாணத்துக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## பெண்ணை வெட்டிக் கொன்றுவிட்டு பெற்றோல் ஊற்றி தன்னை எரித்தவர்
### நேற்று உயிரிழந்தார்

(யாழ்ப்பாணம்)

பெண்ணை வெட்டி கொலை செய்துவிட்டு தன்னைத்தானே பெற்றோல் ஊற்றி எரித்த நபர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் பஸ்தியான் சந்திப்பகுதியில் கடந்த 15ஆம் திகதி அகிலா என்ற குடும்பப் பெண்ணை வெட்டிக் கொன்றபின் பெற்றோலை ஊற்றி தன்னை எரித்துக் கொளுத்திய நிலையில், எரிகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட (20ஆம் பக்கம் பார்க்க)

## விளைச்சல் செய்யப்படாத நெல்வயல்கள் அரசால் பொறுப்பேற்கப்படும்-பிரதமர்

(கொழும்பு)

நாட்டில்விளைச்சல்செய்யப்படாதஅனைத்து நெல்வயல்களும் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு நெல்லுற்பத்தி மேற்கொள்ளப்படும் என பிரதமர் டி.எம்.ஜயரட்ன கூறியுள்ளார்.

நாட்டின் இளைஞர்கள் மீண்டும் அரிசி உற்பத்திக்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் எனவும் இதன் மூலம் நாட்டின் விவசாயத்துறையை முன்னேற்ற முடியும் எனவும் அவர் கூறினார்.

கம்பளை ரன்முல்கடுவையில் வயல் நிலமொன்றை செப்பனிடும் நிகழ்வொன்றில் பங்குபற்றியபோதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எமது பொருளாதார இலக்குகளை அடைவதற்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் ஏமாற்று வித்தைக்கு நாம் இடம் அளிக்கக் கூடாது
### மாவை சேனாதிராசா அறிவுரை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச அழுத்தங்களில் இருந்து தப்புவதற்கு யாழ்ப்பாண மக்கள் தன்னை பிணை எடுப்பார்கள் என ஜனாதிபதி கனவு காண்கின்றார். அதனால் தனது பரிவாரங்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கான தேர்தல் பிரசாரம் வழக்கம்பரை தொல்புரத்தில் அமரர் அமிர்தலிங்கம் அரங்கில் நடைபெற்ற போது (20ஆம் பக்கம் பார்க்க)

## சனல் 4க்கு எதிராக லண்டனில் ஆர்ப்பாட்டம்

(லண்டன்)

சனல் 4ற்கு எதிராக லண்டனில் சிங்களவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். நேற்று இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் லண்டனில் கல்வி கற்கும் சிங்கள மாணவர் இடம்பெற்றிருந்ததாக கூறப்படுகின்றது. (ந)

ஜரோப்பாவில் இருந்து வெளிவரும்
கணினிக்களம்
தற்போது இலங்கையில் அனைத்து புத்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது
- கணினி வல்லுனர்களை ஒன்றிணைக்கும் ஒரே சஞ்சிகை
- ICT மாணவர்களுக்கான விசேட இணைப்பு
- கணினியை கற்பதற்கான இலகுவான வழிகாட்டி
- மாதம்தோறும் பரிசில்களை அள்ளிச்செல்லுங்கள்

மேலதிக தொடர்புகளுக்கு:077-86 88 517 skype: pckalam



# சாட்சியங்களை உறுதிப்படுத்துவதில் நல்லிணக்க ஆணைக்குழு ஈடுபட்டுள்ளது

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவினால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவால் சேகரிக்கப்பட்ட சாட்சியங்களை மீண்டும் உறுதிப்படுத்துவதாக ஆணைக்குழுவின் ஊடகப் பேச்சாளர் லக்ஸ்மன் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொது மக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு இறுதியறிக்கை தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு சாட்சியங்களில் தெளிவின்மை காணப்பட்டால் குறித்த சாட்சியத்தை சமர்ப்பித்தவரை தொடர்பு கொண்டு உறுதிப்படுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உறுதிப்படுத்தல் நடவடிக்கை தொலைபேசி, மின்னஞ்சல், பதிவுத்தபால் மற்றும் தொலைநகல் ஊடாக மேற்கொள்ளப்படும். இதற்கு மேலதிகமாக உறுதிப்படுத்த வேண்டின் அவர்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயலகத்திற்கு அழைக்கப்பட்டு தகவல்கள் பெறப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இறுதியறிக்கையை எழுதுவதற்காக மக்களால் வழங்கப்பட்ட சாட்சியங்கள் தொடர்பில் நல்லிணக்க ஆணைக் குழுவினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காணிப் பிரச்சினை என்றால் காணி ஆணைக்குழுவுடனும் மீள்குடியேற்றம் தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சுடனும் .மாவட்டங்களுக்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பில் குறித்த மாவட்ட செயலகங்களுடனும் தொடர்பு கொண்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் சாட்சியங்கள் உறுதிப்படுத்தப்படுவதுடன் குறித்த சாட்சியங்கள் தொடர்பில் இன்னும் பல மேலதிக தகவல்களை பெறமுடிபதாகவும் குறிப்பிட்ட அவர், நவம்பர் மாதம் 15 ம் திகதிக்கு முன்னர் இறுதியறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (ந)

# வவு. கைதிகள் உண்ணாவிரதம் சட்டமா அதிபருக்கு அறிவிப்பு

வவுனியா சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள கைதிகளின் கோரிக்கைகள் தொடர்பில் சட்டமாஅதிபர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள கைதிகள் சிலர் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் வி.ஆர் சில்வா கூறியுள்ளார்.

2007 ஆம் ஆண்டு மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

தங்கள் மீதான விசாரணை நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு கைதிகள் தொடர்சியாக வேண்டுகோள் விடுத்து வருகின்ற போதிலும் அதனை உடனடியாக மேற்கொள்ள முடியாதென சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

வவுனியா சிறைச்சாலையில் இருக்கும் கைதிகள் தொடர்பான வழக்குகள் வவுனியா மற்றும் மன்னார் நீதிமன்றங்களின் ஊடாகவே விசாரிக்கப்படுவதாக சிறைச்சா லைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ந)

# இளைஞன் காயம்

தனியார் பேருந்தும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்கு உள்ளானதில் இளைஞன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று பகல் யாழ்ப்பாணம் வேம்படிச்சந்தியில் இடம்பெற்றுள்ளது. குறித்த விபத்தில் சாவகச்சேரி கிழக்கைச் சேர்ந்த ஆர்.சுதர்சன் (வயது 29) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவ்விபத்து சம்பவம் குறித்த விசாரணைகளை யாழ் நகர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந -6-4)

# அரசாங்கம் திட்டமிட்ட முறையில் தேர்தல் சட்டங்களை மீறுகிறது

## கபே அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் திட்டமிட்ட முறையில் தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்பட்டு வருவதாக கபே எனும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

குறிப்பாக வடக்கில் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் போட்டியிடும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்களை திட்டமிட்ட முறையில் அச்சுறுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் பீதியை ஏற்படுத்தும் நோக்கில் திட்டமிட்ட சில நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்வோரை நூற்றுக்கண்கான இராணுவத்தினர் வீடியோ படம் எடுப்பதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வீடியோ படம் எடுத்தால் மக்கள் கூட்டங்களில் கலந்து கொள்ள அஞ்சு வார்கள் என அவர் குறிப்பிட்டுள் ளார். இதேவேளை வடக்கில் சுதந்திரமாக கருத்துக்களை தெரிவிப்பதற்கோ சுதந்திரமாக ஒன்று கூடுவதற்கோ சந்தர்ப்பம் கிடையாது என ஜே.வி.பி பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி கடற்படைத் தளபதியின் உத்தியோகபூர்வ இல்லமொன்றில் தங்கியிருந்து பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றார். வடக்கிற்கு படையெடுத்துள்ள அமைச்சர்கள் தேர்தலை இலக்கு வைத்து மக்களுக்கு பல்வேறு நலன்களை வ்ழங்கி வருகின்றனர். இராணுவத்தினர் பிரசார நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்துவதுடன் சில பகுதிகளில் வேட்பாளர் பிரசாரம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்

இதேவேளை சில சிறு சம்பவங்களைத் தவிர பாரிய சிக்கல்கள் எதுவும் கிடையாது என அரசாங்க பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப் படையினருக்கு உரிய முறையில் தகவல் வழங்காமை காரணமாக சில நேரங்களில் இவ்வாறு சில முரண்பாடுகள் ஏற்படுவதாகவும் அவை பாரிய பிரச்சினையாக கருத முடியாது எனவும் அவர் சுட்டிகாட்டியுள்ளார். (ந)



சனல் 4 தொலைக்காட்சியால் தயாரிக்கப்பட்ட இலங்கையின் கொலைக்களம் ஆவணப்படத்துக்கு எதிராக லண்டனில் நேற்று ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று சிங்களவர்களால் மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை படத்தில் காணலாம்.

# மீசாலையில் மின்சாரம் தாக்கி டாக்டர் ஒருவர் உயிரிழந்தார்

(மீசாலை)

மீசாலை மேற்கில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளர். நேற்று முன்தினம் நடந்த இச்சம்பவத்தில் மீசாலை மேற்கைச் சேர்ந்த டாக்டர் வி.தம்பித்துரை ( வயது 63 ) என்பவரே உயிரிழந்தவராவார்.

வீட்டில் மின்சாரம் தடைப்பட்டபோது மின் இணைப்பை சீர்செய்ய முற்பட்ட வேளையி லேயே அவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

டாக்டர் தம்பித்துரை மீசாலையில் தனியார் வைத்தியசாலை ஒன்றை நடத்தி வந்தவர்என்பதுகுறிப்பிடத்தக்கது. (ந)


## சிவபார்வதி ஜோதிட நிலையம்

### பண்டித்-மஞ்சுநாத சுவாமி

தொ.பே. இல: 077 8949044

அன்பானவர்களே!

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் வம்சா வளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில், வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம் போன்ற விடயங்களையும், கணவன்-மனைவி ஒற்றுமையின்மை, கோர்ட் வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்கு பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல், வெளியூர் பயணங்கள், கல்வி உத்தியோகம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், எதிரிகள் கண்திருஷ்டி போன்ற எல்லாவித பிரச்சினைகளையும் எதிர்கால பலாபலன்களையும் தெரிவிப்பார்.

**சண்ஜெய உணவகம் (மேல்மாடி)**

414, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)

நேரம்:- காலை 7.00 மணி முதல் மாலை 7.30 மணி வரை

கட்டணம் ரூபா 101/-

(5391)


# அபிவிருத்தித் திட்டங்களில் பங்களிக்காத அமைச்சர்கள் மீது நடவடிக்கை

(கொழும்பு)

கடமைகளை உரிய முறையில் மேற்கொள்ளாத அமைச்சர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது. அரசாங்கத்தின் அபிவி ருத்தித் திட்டங்களில் பங்களிப்புச் செய் யாத சில அமைச்சர்கள் அடையாளம் காண ப் பட்டுள்ளனர். இவ்வாறான அமைச் சர்களுக்கு எதிராக விரைவில் நடவடிக் கை எடுக் கப்படும். இந்த ஆண்டின் இறுதிக்குள் அமைச்சர வையில் சில மாற்றங்கள் ஏற்படுத்தக் கூடிய சாத் தியம் உள்ள நிலையில் உரிய முறையில் கடமை யாற்றாத அமைச்சர்கள் பற்றி ஜனாதிபதிக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.(ந)


## ஆனந்தி திருமணசேவை

### மணமகள் தேவை

யாழ். வளாக விஞ்ஞானப் பட்டம், லண்டனில் வர்த்தக கற்கைநெறி மாணவர் விஸாவில்; 77இல் பிறந்த; பூராடம், பாவம் 24 3/4, 9 இல் செவ்வாய் உள்ளவருக்கு லண்டன் மற்றும் ஐரோப்பிய நாடொன்றில் குடியுரிமை பெற்ற மணமகளை விரும்புகின்றோம்.

நேரடி/அஞ்சல் T.P.:0212228708 மூலம் தொடர்பு: V.A.சிவராசா (சோதிடர்) 56, அம்மன் றோட், கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

(5395)

## தவறிவிட்டது

சுப்பிரமணியம் குணரட்ணம் என்பவருடைய 36-4072 என்னும் இலக்கமுடைய உழவு இயந்திரத்தின் புத்தகம் இணுவிலுக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் (கே.கே.எஸ். வீதி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 5052632

(5394)

# இன்று ஒரு தகவல்

## தொப்பி சாமி

இமயமலை அடிவாரத்தில் ஒரு மடம்.

அங்கு ஒரு சந்நியாசி இருந்தார்.

அவரிடம் ஒருவர் வந்து, "சுவாமி.. நான் ஆசையை உதற நினைக்கிறேன்.. முடியவில்லை... ஒட்டிக் கொண்டே வருகிறது...!" என்றார்.

அதைக் கேட்ட சந்நியாசி, "இப்படி உட்கார்... உனக்கு ஒரு கதை சொல்கிறேன்" என்றார்.

இவர் உட்கார்ந்தார். அவர் கதை சொல்ல ஆரம்பித்தார்:

ஓர் ஊரில் ஓர் ஆள் இருந்தான். அவன் பெயர் குப்புசாமி. அவனிடம் எப்போதும் ஒரு பழைய தொப்பி இருக்கும். அதை அவன் விடவே மாட்டான்.

அதனால் அவனை எல்லோரும், 'தொப்பி சாமி' என்று அழைத்து வந்தார்கள்.

அவனிடம் அவனது நண்பர்களெல்லாம், "நீ ஒரு புதுத் தொப்பி வாங்கிக் கொள்ளக் கூடாதா?" என்று பலமுறை சொல்லிப் பார்த்தார்கள்.

அதற்கு அவன், "புதுத் தொப்பி வாங்குவதற்குப் பணத்திற்கு எங்கே போவேன்?" என்று கூறிவிட்டான்.

அவனிடம் பணம் இருந்தது. ஆனால் அதைச் செலவு செய்ய அவனுக்கு மனம் வரவில்லை... மகா கஞ்சன்.

அவன் பழைய போத்தல்கள் வாங்கி விற்பது வழக்கம்.

அப்படி அவன் ஒரு சமயம் பழைய கண்ணாடி சாமான்களை ஏலத்தில் எடுத்தபோது, அதில் ஓர் அருமையான 'சென்ட்' போத்தல் கிடைத்தது.

உடனே அவன் ஒரு சிந்தனை பண்ணினான். அந்தச் சென்டைச் சிறிய சிறிய போத்தல்களில் அடைத்து ஜன்னல் ஓரமாக அடுக்கி வைத்து விட்டான். அதை விற்றால் நிறைய பணம் கிடைக்குமே... அதனால் அவன் அப்படி செய்தான்.

இதற்கிடையில் ஒருநாள் அவன் நண்பன் வந்து, "ஏண்டா! நீ உன் பழைய தொப்பியை மாற்றக் கூடாதா? ஊரில் எல்லோரும் உன்னைக் கேலியாகப் பேசுகிறார்களே?" என்றான்.

இவன், "சென்ட் போத்தல் விற்றதும் பணம் வரும். அப்புறம் பார்க்கலாம்!" என்று கூறினான்.

நண்பன் இவனை, 'சரி... வா... நீச்சல் குளத்திற்குப் போய் வருவோம்' என்று கூறி அழைத்தான்.

இரண்டு பேரும் நீச்சல் குளத்திற்குச் சென்றார்கள்.

அதே சமயத்தில் அந்த ஊர் நீதிபதியும் அங்கு குளிப்பதற்கு வந்தார். அவரிடம் விலை உயர்ந்த ஒரு புதிய தொப்பி இருந்தது. அதை அவர் அங்கே இருந்த ஸ்டாண்டில் மாட்டிவிட்டு குளிக்கச் சென்றார்.

இதற்கிடையில் குப்புசாமி குளித்துவிட்டு வந்தான். அவனுடைய பழைய தொப்பியை அங்கு காணவில்லை... அந்தப் புதுத்தொப்பியைப் பார்த்தான். 'இது நண்பனுடைய வேலை!' என்று நினைத்து, அதை குப்புசாமி எடுத்து மாட்டிக் கொண்டு வந்துவிட்டான்.

நீதிபதி குளித்துவிட்டு வந்து பார்க்கிறார். அவர் வைத்த இடத்தில் அவரது தொப்பியைக் காணவில்லை.

அதனால் அவர் பொலிஸில் புகார் கொடுத்தார்.

பொலிஸ்காரர்கள் வந்து தேடினார்கள்... ஒரு மூலையில் பழைய தொப்பி கிடைத்தது. "அடடா! இது நம்ம குப்புசாமியின் தொப்பியல்லவா?" என்றார்கள். அவன் வீட்டுக்குச் சென்றார்கள்.

அங்கு புதுத்தொப்பி இருந்தது. அவனுக்கு ஆயிரம் ரூபாய் அபராதம் போட்டார்கள்.

குப்புசாமி ஆயிரம் ரூபாய் அபராத தொகையை கட்டிவிட்டு எரிச்சலுடன் வீட்டுக்கு வந்தான்.

பழையதொப்பி அவன் கண்ணில் பட்டது.

"உன்னால்தானே எனக்கு ஆயிரம் ரூபாய் நட்டம்!" என்று அவன் கோபத்துடன் கத்திக்கொண்டே அதை எடுத்துக் கொண்டு போனான். அதை ஊர் குளத்தில் வீசி எறிந்துவிட்டு வந்தான்.

அந்தத் தொப்பி மீன் பிடிக்கும் ஒருவன் கையில் சிக்கியது. அவன் போகும் வழியில் அதை எடுத்து வேகமாக வீசி எறிந்தார். அது நேராக குப்புசாமியின் வீட்டு ஜன்னல் வழியாக உள்ளே வந்து சென்ட் போத்தல்கள் மேலே விழுந்தது. அதனால் அங்கிருந்த எல்லா சென்ட் போத்தல்களும் உடைந்து நொறுங்கிவிட்டன.

குப்புசாமி பார்த்தான். தன் வீட்டு தோட்டத்தில் ஆழமாக ஒரு குழியை வெட்டினான். அதில் தொப்பியைப் போட்டு மூடிவிட்டான்.

இதை அடுத்த வீட்டுக்காரன் பார்த்தான்.

அவன், குப்புசாமி ஏதோ புதையல்தான் வைத்திருக்கிறான்! என்று நினைத்து பொலிஸில் புகார் செய்தான். மறுபடியும் பொலிஸ் குப்புசாமியின் வீட்டுக்கு வந்தது. குழியைத் தோண்டினார்கள்.

பழைய தொப்பி மறுபடியும் வெளியே வந்தது. எல்லோரும் சிரித்தார்கள்.

அன்றைக்கு ராத்திரியே குப்புசாமி அந்தத் தொப்பியை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். ஒரு கல்லில் அதைச் சேர்த்துக்கட்டி குடிநீர் தொட்டியில் போட்டு விட்டான்.

ஒருநாள் திடீரென்று குழாய் அடைபட்டுப் போயிற்று... மாநகராட்சி அலுவலர்கள் வந்து என்ன என்று பார்த்தால், அந்தப் பழைய தொப்பி குழாயை அடைத்துக் கொண்டிருக்கிறது! இது குப்புசாமியின் தொப்பி என்பது எல்லோருக்கும் தெரிந்து விட்டது.

குடிநீரைப் பாழாக்கியதற்காக குப்புசாமிக்குக் கோர்ட் 2ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதித்தது.

அபராதத் தொகையைக் கட்டிவிட்டு குப்புசாமி வெளியில் வந்தான்.

கடைசியாக அவன் ஒரு முடிவுக்கு வந்தான். ஒரு நெருப்புக் குச்சியைக் கிழித்தான். தொப்பியைக் கொளுத்தினான். தொப்பி எரிந்தது. அதை அப்படியே எடுத்து வெளியில் எறிந்தான்.

சிறிது நேரத்தில் தீயணைப்புப்படை வந்துவிட்டது. ஆமாம்... இவன் எடுத்தெறிந்தது வெளியில் விழுந்து வீட்டுக் கூரையே பற்றிக்கொண்டது. அதோடு சேர்ந்து அவனுடைய பணத்தாசையும் எரிந்து போயிற்று– என்று சந்நியாசி கதையைச் சொல்லி முடித்தார்.

அந்த குப்புசாமியிடம் இருந்தது போன்ற ஒரு பழைய தொப்பி நம் ஒவ்வொருவரிடமும் இருக்கிறது... அதை எப்படித் தொலைப்பது என்று தெரியாமல் நாம் தடுமாறிக்கொண்டிருக்கிறோம்.

அது என்ன தொப்பி என்று கேட்கிறீர்கள்? அதுதான் நம்மைச் சூழ்ந்திருக்கும் மாயை, மெய்ஞ்ஞானம் கிடைக்கும்போது மாயை எரிந்து போகும் என்று பெரியவர்கள் கூறுகிறார்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கடற்றொழிலுக்காக சென்ற 2 மீனவர்களை காணவில்லையென முறைப்பாடு

(பூநகரி)

பூநகரி வலைப்பாடு கீரிக்குடா மீன்பிடித்துறையிலிருந்து கடற்றொழிலுக்காக சென்ற வேளை கடும் காற்று வீசியதில் மீன் பிடிப் படகொன்று கடலில் மூழ்கி யுள்ளது.

இப்படகில் சென்ற மூன்று மீனவர்களில் ஒருவர் நீந்திக் கரை சேர்ந்துள்ளதுடன் மற்றைய இருவரைக் காணவில்லையென முறையிடப் பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, மேற்குறித்த மீன் பிடித்துறையிலிருந்து நேற்று முன் தினம் பிற்பகல் ஒரு மணிக்கு 3 மீனவர்கள் படகொன்றில் கடற்றொழிலுக்கு சென்றுள்ளனர்.

இதன்போது கடும் காற்று வீசியதன் காரணமாக அம் மீன்பிடிப்படகு 4 கிலோமீற்றர் தொலைவில் நடுக் கடலில் மூழ்கியுள்ளது. இதில் எஸ். ஜெகதாசன் (வயது–24) என்ற மீனவர் பெரும் சிரமத்தின் மத்தியில் நீந்திக் கரை சேர்ந்துள்ளார். மற்றைய இரு மீனவர்களான எஸ்.வினோதராஜா (வயது–28) யா. தம்பி (வயது–24) ஆகிய இருவரும் இதுவரை கரை திரும்பவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பூநகரி பள்ளிக்குடா கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் எஸ்.யஸ்ரின் 661ஆவது படைப்பிரிவின் இராணுவ அதிகாரிக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து இராணுவ வீரர்களும் கடற்றொழிலாளர்களும் காணாமல் போன மீனவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். குறித்த மீனவர்களின் நிலை குறித்து இது வரை எந்தத் தகவலும் கிடைக்க வில்லை.

(ஸ்ரீ–84)

# சர்வதேச திரைப்பட விழாவில் இலங்கை இயக்குநருக்கு விருது

இலங்கையின் இளம் திரைப்பட இயக்குநரான சுஜீவ் புஷ்பகுமார, சென்பீற்றர்ஸ்பர்க் சர்வதேச திரைப்பட விழாவில் புதிய பிராந்திய பிரிவில் சிறந்த இயக்குநருக்கான விருதை வென்றுள்ளார். இவ்விழா கடந்த 10 முதல் 15 ஆம் திகதிவரை ரஷ்யாவின் சென்பீற்றர்ஸ்பர்க் நகரில் நடைபெற்றது.

சுஜீவ புஷ்பகுமார தனது முதலாவது திரைப்படமான இகிலென மாலுவோ (பறக்கும் மீன்கள்) எனும் திரைப்படத்திற்காக இவ்விருதை வென்றார். யுத்தத்திற்கு மத்தியில் கிழக்கு மாகாணத்திலுள்ள கிராமமொன்றில் நடக்கும் 3 கதைகளை கொண்ட திரைப்படம் இது. சீனா, ஈரான், ரஷ்யா, அமெரிக்கா, போலந்து, ஸ்பெயின், டென்மார்க் ஆகிய நாடுகளின் 10 திரைப்படங்களுடன் போட்டியிட்டு இவ்விருதை சுஜீவ வென்றுள்ளார்.

இதேவேளை புதிய பிராந்தியங்களுக்கான சிறந்த படமாக சீன இயக்குநர் மியோயான் ஸாங் இயக்கிய பிளேட் பிளட் எனும் திரைப்படம் தெரிவு செய்யப்பட்டது.

(ஸ்ரீ–2)

# அதிபர்களுக்கான கூட்டம்

துணுக்காய் வலய பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு மு/தண்டுவான் அ.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் பல முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதால் அனைத்து பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் கேட்டுக் கொள்கின்றார்.

(ஸ்ரீ–2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 85 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 80 |
| தக்காளி | 40 | 40 |
| மரவள்ளிக் கிழங்கு | 50 | 50 |
| கோவா | 40 | 60 |
| கரட் | 60 | 70 |
| பூசணி | 25 | 20 |
| புடோல் | 20 | 30 |
| வாழைக்காய் | 35 | 35 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 |
| பெரிய வெங்காயம் | 55 | 60 |
| பாகற்காய் | 70 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | -- |
| பயற்றங்காய் | 80 | 90 |
| லீக்ஸ் | 45 | 50 |
| பீற்றூட் | 40 | 60 |
| கறிமிளகாய் | 70 | 70 |
| முருங்கைக்காய் | 80-100 | 150 |
| போஞ்சி | 90 | 90 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 |
| கீரை - 1 பிடி | 10-15 | 10 |
| தேசிக்காய் | 30 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 45 |

# இராசி பலன்

18.07.2011

(ஆடி 02, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு

திருதியை பிற்பகல் 2.02 மணிவ்ரை

அவிட்டம் பிற்பகல் 01.12 மணிவரை

இராகுகாலம் 7.30-9.00 மணிவரை

சுபநேரம் 12.00-1.30 மணிவரை

**மேடம்** ஆனந்தமான நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பயண வாய்ப்புக்கள் கைகூடுவதற்கான வாய்ப்புக்கள் தோன்றும், குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

**இடபம்** சொல்லை செயலாக்கி காட்ட முன்வருவீர்கள், தொழில் வளர்ச்சிக்கு உதவியவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள், சமுதாயத்தில் உயர் நிலைக்கு வரும் எண்ணம் மேலோங்கும்.

**மிதுனம்** பகை விலகி பாசம் கூடும், தடைப்பட்ட காரியத்தை விரைந்து செய்து முடிப்பீர்கள், வேலைச்சுமை குறையும், ஆரோக்கியம் சீராகி ஆனந்தமடைவீர்கள்.

**கடகம்** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகலாம், வேலையாட்களிடம் விவாதித்து வேலையை முடிப்பீர்கள்.

**சிங்கம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படையும் நாள், மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறும், இளமைக் கால நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், கௌரவமான நாள்.

**கன்னி** இனத்தார் பகை மாறி இன்பங் கூடும் நாள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், உள்ளன்போடு பழகியவரின் எண்ணிக்கை கூடும், உடல் நலம் சீராகும்.

**துலாம்** மக்கட் செல்வங்களால் மகிழ்ச்சி கூடும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், கட்டடப்பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும், வருங்கால நலன் கருதி புதிய திட்டங்களை வகுப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, பாராட்டும் புகழும் கூடும்.

**தனுசு** உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பால் உற்சாகமடையும் நாள், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக இருந்த தகவல் முடிவில் ஆதாயத்தை கொடுக்கும்.

**மகரம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உதவும், பொது வழியில் புகழ் கூடலாம்.

**கும்பம்** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள், மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும், தொழிலில் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது.

**மீனம்** கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்ள முன்வருவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், திடீர் பயணங்களால் சிறு அலைச்சலும் செலவும் ஏற்படலாம்.

வளவன்

# மீள்குடியேறி இருவருடங்கள் கடந்த போதும் அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படவில்லை

## முஸ்லிம் மக்கள் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறி இரண்டு வருடங்கள் சென்று விட்டன. இதுவரை எந்த அமைச்சர்களும் எங்கள் தேவைகளைக் கேட்டறிய முன்வரவில்லை என பாதிக்கப் பட்ட முஸ்லிம் மக்கள் தமது ஆதங்கத்தை தெரிவித்தனர்.

ஒஸ்மானியாக் கல்லூரியில் நேற்று முன் தினம் இம் மக்களின் தேவைகளைக் கேட் டறிய வந்திருந்த இலங்கைக்கான ஈரானின் கலாசாரத் தூதுவரான மவுற.தி.ஜி.ருக்னி இடமே தமது இவ் ஆதங்கத்தைத் தெரிவித்தனர்.

அவர்கள் அங்கு தெரிவிக்கையில், நாம் 1999ஆம் ஆண்டு யாழ்ப்பணத்திலிருந்து பலவந்தமாக விரட்டப்பட்டோம். 30 ஆண்டு காலயுத்தத்தின் பின் நாம் இங்கு மீள்குடிய மர்ந்துள்ளோம். 30 ஆண்டு காலமாக எமது சொந்த இடத்தை இழந்து இடப்பெயர்ந்து நாம் அனுபவித்த துன்பங்கள் வார்த்தை யால் வர்ணிக்க முடியாதவை.

முப்பது ஆண்டுகளின் பின் நாம் இங்கு வாழ்கின்ற போதிலும் எமது பிள்ளைகளும் வளர்ந்து விட்ட நிலையில் அவர்களும் தங் கள் குடும்பங்களுடன் வாழ்வதற்கு இடப் பற்றாக்குறையே நிலவுகின்றது. இதற்கு நீங் கள் இடவசதியை ஏற்படுத்தித் தரும்பட்சத்தில் எம்மால் இயன்ற தற்காலிக கூடாரமாவது அமைத்து கொள்வோம்.

மீள்குடியேறி இரண்டு வருடங்களாகியும் ஒரு மலசலகூடத்தைக் கூட அமைத்துத்தர யாரும் முன்வரவில்லை.இதனால் நாம் எதிர் கொள்ளும் சூழல் நெருக்கடிகள் ஏராளம். சாதாரண வசதிகூட இல்லாமல் எவ்வாறு வாழ்ந்திட முடியும்?

எங்கள் தேவைகளை நீங்கள் ஈரான் குடியரசிற்கு எடுத்துக் கூறி எமது தேவை களை நிறைவு செய்ய நடவடிக்கை எடுங்கள் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஸ்ரீ-4)

## சிறப்பு சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர அழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சி ரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொட ரில் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 10 மணிக்கு பூசை முடி வுற்றதும் பக்தி எனும் விடயம் பற்றி சைவப் புலவர் சி.நவரட்ணம் சொற்பொழிவாற்ற வுள்ளார்.

(ஸ்ரீ-35)




## தடகள போட்டியில் 17 வயதுப் பிரிவில் 3 தங்கப் பதக்கங்கள் வென்று சாதனை



(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட் டிகளில் மூன்று தங்கப் பதக்கங்களை வென்று மாதகல் சென் ஜோசப் மகாவித்தியாலய வீராங்கனை அருமைநாயகம் அனற் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

இவர் வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற தடகள போட்டிகளில் 17 வயது பிரிவில் 400 மீற்றர்,800 மீற்றர் ஓட்டம், தடைதாண்டல் போட்டிகளில் தங்கப்பதக்கத்தை வென்று சாதனை படைத்துள்ளார்.

இவ் வீராங்கனை 400மீற்றர்,800 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் 17 வயதுப்பிரிவில் வடமாகாண சாதானையை முறியடித்து (400 மீற்றர்- 1.04.60 நிமிடத்திலும், 800 மீற்றர் -2.40. 06 நிமிட) புதிய சாதானையை நாட்டியுள் ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

## யாழ்.மக்களுக்கு 20கோடிரூபா கடன் வழங்கும் திட்டம்

### ஜனாதிபதி தலைமையில் நாளை வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மக்களின் வாழ்வாதார நடவ டிக்கையை மேம்படுத்தும் நோக்கில் கடன் வழங்கும் வேலைத்திட்டமொன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது சுமார் 20 கோடி ரூபா தொகையானது ஆயிரத்து 280 பேருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வீடமைப்புக்காகவும் சுயதொழிலுக்காக வும் தலா 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையான கடன் தொகை வழங்கப்படவுள் ளது.

நிர்மாணத்துறை அதிகாரசபை மற்றும் இலங்கை வங்கியின் ஒத்துழைப்போடு மேற் படி கடன் திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

## இரு வெவ்வேறு விபத்து சம்பவங்களில் இருவர் படுகாயம்

(கரவெட்டி)

வடமராட்சியில் இடம்பெற்ற இரண்டு வெவ் வேறு வாகன விபத்துச் சம்பங்களில் இருவர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவ தாவது, மருதங்கேணியில் நேற்று முன் தினம் பிற்பகல் 2 மணிக்கு மோட்டார் சைக் கிளை அதிவேகமாக செலுத்திய வேளை பொலிகண்டியைச் சேர்ந்த தோமஸ் ராஜி (வயது 27) என்பவர் தவறி விழுந்து காய மடைந்துள்ளார். மற்றுமொரு சம்பவத்தில் ஆழியவளைப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணிக்கு தலைக்கவசமணியா மல் மோட்டார் சைக்கிளை வேகமாக செலு த்தி சென்றவேளை தவறி விழுந்ததில் அப் பகுதியைச் சேர்ந்த வாரித்தம்பி நந்தகுமார் (வயது 28) என்பவர் முகத்தில் படுகாய மடைந் துள்ளார்.

இவர்கள் இருவரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகி ச்சை பெற்று வருகின்றனர்.

(ஸ்ரீ-24)

## காரைநகர் மக்களுக்கு வாழ்வாதார உதவிகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பொரு ளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுத வியுடன் மக்களுக்கான வாழ்வாதார உதவி கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு நேற்று முன்தினம் காரை நகர் வலந்தலை ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற் றது.

இதில் மீள்குடியேற்றப்பட்ட வறுமைக் கோட் டின் கீழ் வாழும் விவசாய குடும்பங்களுக்கு வீட்டுத்தோட்டங்கள் அமைப்பதற்கான உபகர ணங்களும், பெண்களை தலைமைத்துவ மாக கொண்டு இயங்கும் குடும்பங்களுக்கு தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

அத்தோடு வறிய மக்களுக்கான மலசல கூடங்கள் அமைப்பதற்கான உபகரணங் களும், மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கப்பட்டது.

இவைதவிர காரைநகர் கடற்றொழில் சமாசத்திற்கான அலுவலக தளபாடங்கள், விவசாயிகளுக்கான சேதனப்பசளை உரு வாக்குவதற்கான உபகரணங்கள், வறிய மக்களுக்கு உடைகள், சமுர்த்தி பயனாளிக ளுக்கான கடன்கள் என்பனவும் வழங்க ப்பட்டது.

இந்நிகழ்வில் பொருளாதார் அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் பிரதி அமைச்சர் எம். ஹிஸ்புல்லாஹ், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, கிழக்கு மாகாண ஆளுநர் மொகான் விஜயசேகர எனப்பலர் கலந்து கொண்டனர்.

(ஸ்ரீ-6)

## பருத்தித்துறையில் அபிவிருத்தி திட்டங்கள் ஆரம்பித்துவைப்பு

வடமாகாண சபையால் உள்ளூராட்சி சபை கள் தோறும் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத் திட்டங்களில் ஐந்தாம் நாளான நேற்றைய அங்குரார்ப்பண நிகழ்கள் பருத்தித்துறையில் துரித மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ , பாரம்பரிய கைத் தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியேருடன் பிரதி அமைச்சர்களும் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச சபை யின் மருதங்கேணி சந்தை அமைத்தல், பருத் தித்துறை நகரசபை அலுவலக கட்டடம் அமை த்தல் வேலைகளை அமைச்சர் பசில் ராஜ பக்ஷ ஆரம்பித்து வைத்தார்.

அதேவேளை உள்ளூர் சேவைகள் மேம் பாட்டுத்திட்டத்தின் கீழ் பருத்தித்துறை பிரதேச சபையினால் தெரிவு செய்யப்பட்ட அபிவிருத் தித்திட்டங்களான உருத்திராவத்தை பாடசாலை வீதி,திக்கம் பாடசாலை வீதி மற்றும் துரித மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் அம்பன் பிள்ளையார் வீதி ஆகியவற்றின் புனருத்தாரண வேலைக ளும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

(ஸ்ரீ)

## மஹோற்சவம்

(மருதங்கேணி)

புலோலி பசுபதீஸ்வரர் ஆலய அம்மன் திருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற் றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட்மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தேர் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

(ஸ்ரீ-35)







வடமராட்சி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக புள்ளிவிபரவியல்துறை தலைவர் கலாநிதி எஸ்.ஸ்ரீசண்முகராஜா உட்படவிருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், பிரதம விருந்தினரின் பாரியார் எஸ்.சிவராணி மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும், இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-கரவெட்டிச் செய்தியாளர்)

## வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் தொடர்பில் கோரிக்கைகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை

### தேர்தல் திணைக்கள அதிகாரி தெரிவிப்பு

வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஈடுபடுத்துவது குறித்து இதுவரையில் எந்தவொரு கட்சியும் கோரிக்கை எதனையும் முன்வைக்கவில்லை என தேர்தல் திணைக்கள சிரேஷ்ட அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலில் சர்வதேச கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த வேண்டுமென்றால் அது தொடர்பில் கட்சிகள் எழுத்து மூலம் தேர்தல் திணைக்களத்திடம் கோரிக்கை முன்வைக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

கட்சி செயலாளர்களுக்கும் தேர்தல் ஆணையாளருக்கும் இடையிலான சந்திப்பின் போதும் இவ்வாறான கோரிக்கை முன்வைக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கோரிக்கை தேர்தல் நடைபெறுவதற்கு சில வாரங்களுக்கு முன்னதாகவே முன்வைக்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வெளிநாட்டு கண்காணிப்பாளர் ஈடுபடுத்தப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் அரிதாகவே காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## தேர்தலுக்கு இராணுவ அடையாள அட்டையை பயன்படுத்துவது தொடர்பில் கலந்தாலோசனை

வடக்கில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் இராணுவத்தினரால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளை மீண்டும் பயன்படுத்தி வாக்களிப்பில் கலந்து கொள்ள அனுமதி வழங்குவது தொடர்பாகத் தேர்தல்கள் ஆணையாளருடன் கலந்துரையாடவுள்ளதாகத் பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அந்தஅமைப்பின் நிறைவேற்று அதிகாரி ரோஹண ஹெட்டியாராய்ச்சி இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு,

வடக்கில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெறுகின்றன என்று ஜே.வி.பி.யும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் குற்றஞ்சாட்டியுள்ளன. இது தொடர்பாக அரசும் தேர்தல் ஆணையாளரும் நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்தல் கண்காணிப்பாளர்கள் என்ற வகையில் தேர்தல் அமைதியாக இடம் பெற வேண்டும் என்பதே எமது விருப்பம். தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக அரசோ எதிர்க்கட்சிகளோ மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தேர்தல் மீது வடக்கு மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை இழக்கச்செய்யக் கூடாது.

யுத்தம் முடிவடைந்து ஒரு சில வருடங்களுக்குள்ளேயே தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் சுதந்திரமும் வடக்கு மக்களுக்கு இருக்க வேண்டும். இந்த சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் பாதிக்கும் வகையில் அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் அமையக்கூடாது.

கிளிநொச்சியில் தொடர்ந்தும் மீள்குடியமர்வு இடம்பெறுகின்றது. இது இன்னும் முடிவடையவில்லை. இவர்களில் தேசிய அடையாள அட்டைகள் இல்லாத பலரும் உள்ளனர். அவர்கள் தற்காலிக அடையாள அட்டைகளைபயன்படுத்தலாம். தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கும் நடவடிக்கை கடந்த 13 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளதால் அதிகம் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்த மக்களுக்கு இராணுவத்தினரால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளை இந்த மக்கள் ஒரு தடவை வாக்களிப்பதற்குப் பயன்படுத்தினர்.

தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் இந்த இராணுவ அடையாள அட்டைகளைப் பயன்படுத்த அனுமதி வழங்குவது தொடர்பாக நாம் தேர்தல்கள் ஆணையாளருடன் கலந்தாலோசிக்கவுள்ளோம் என்றார். (ஸ்ரீ-2)

## வாகனம் விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில்

(மல்லாவி)

ஏ-9 வீதியில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பை நோக்கி சென்று கொண்டிருந்த டிமோ ரக ஊர்தியொன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் மாங்குளம் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் மாங்குளம் மகா வித்தியாலத்திற்கு முன்பாக இடம் பெற்றுள்ளது.

இது பற்றி தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பை நோக்கி பலாப்பழங்கள் ஏற்றியபடி மேற்படி வாகனம் ஏ-9 வீதியால் பயணித்த வேளையில் மாங்குளம் மகாவித்தியாலயத்திற்கு முன்பாக எதிரே வந்த பாரவூர்தியை விலத்திச் செல்ல முற்படுகையில் பலாப்பழங்களின் பாரம் காரணமாக சரிந்து விழுந்துள்ளது. இதில் அவ்வூர்தியில் பயணித்த ஒருவர் படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் மாங்குளம் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து அங்கு விரைந்து சென்ற மாங்குளம் பொலிஸார் தடைப்பட்டிருந்த போக்குவரத்தை சீர்படுத்தியதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (ஸ்ரீ-2-15)

## 1 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

### செல்வி வைத்தீஸ்வரன் ஆருத்ரா

திரு திருமதி வைத்தீஸ்வரன் வளர்மதி தம்பதிகளின் செல்வப் புதல்வி செல்வி .வை. ஆருத்ரா அவர்கள் தனது 1 ஆவது பிறந்த நாளை 18.07.2011 திங்கட்கிழமை இன்று தனது இல்லத்தில் வெகு விமர்சையாக தாய், தந்தை உற்றார், உறவினர்களுடன் கொண்டாடுகின்றார். இவர்கள் இந்நன்நாளில் பல்கலையும் பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.



(5375)


வாழ்த்தும்:
அப்பம்மா-V.ஞானேஸ்வரி
அத்தை-V.மைதிலி

வரணி வடக்கு,
வரணி.

## மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் இலட்சுமணன்

(சி-5396)



கோவில் வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் இலட்சுமணன் நேற்று (17.07.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-பத்தினி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இலட்சுமணன்-நாகம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற ராசாத்தி மற்றும் அப்புத்துரை (பெரியாம்பி), பாக்கியம் (சிம்மினி) ஆகியோரின் சகோதரரும்,

புஸ்பராணி, புஸ்பராசா (லண்டன்), வசந்தமலர் (ஜேர்மன்), ரவீந்திரன், பகீந்திரன் (லண்டன்), தர்சினி, நிஷாந்தன் (யாழ். பல்கலைக்கழகம் கலைப்பீடம் 2 ஆம் வருடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும்,

வரதராசா, பிரியதர்சினி, சிவயோகநாதன் (ஜேர்மன்), யாழினி, ரஜிதா (லண்டன்), உதயசிவம் (உதயா ஸ்ரோர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2011) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோவில் வீதி,
மல்லாகம்.

தகவல்-
குடும்பத்தினர்.

# வடக்கு-கிழக்கு மக்களின் வாக்கு சர்வதேசத்திற்கு பதில் சொல்லும்

## அமைச்சர் விமல்வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு-கிழக்கு மக்கள் வழங்கும் தீர்ப்பு இலங்கைக்கு எதிரான சர்வதேச சக்திகளுக்கு சிறந்ததொரு பதிலை அளிக்கும் என விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

திருகோணமலை 5 ஆம் கட்டை பிரதேசத்தில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் ரீதியில் வடக்கு தமிழ் மக்கள் தற்போது மாறிவருவதாக அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வைராக்கியத்துடன் அரசியல் செய்பவர்கள் அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மத்தியில் தோற்றுப்போயுள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# நேரடி நாணயப் பரிமாற்றம் குறித்து இலங்கை-மாலைதீவு பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இலங்கை மற்றும் மாலைதீவு நாணயங்களுக்கிடையிலான நேரடிப் பரிமாற்றம் குறித்த கலந்துரையாடல் தொடர்ந்து நடைபெற்று வருவதாக மாலைதீவு அரசாங்கம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

இலங்கை ரூபா மற்றும் மாலைதீவு ரூபாவிற்கு இடையிலான நேரடிப் பணப்பரிமாற்றம் குறித்த நடவடிக்கைகளில் இருநாடுகளினதும் நிதி சம்பந்தமான அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாக மாலைதீவு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் மஹ்மூத் ரஸி தெரிவித்தார்.

நாணய பரிமாற்றம் குறித்து இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் மாலைதீவு ஜனாதிபதி முஹம்மத் நஸீட்டும் முன்னர் கலந்துரையாடியதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும் இத்திட்டம் தாமதமடைவதற்கான காரணம் என்னவெனக் கூற அவர் மறுத்து விட்டார்.

கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியேற்பு வைபவத்தில் மாலைதீவு ஜனாதிபதி கலந்து கொண்டார். அப்போது இரு நாடுகளின் நேரடி நாணயப் பரிமாற்றம் குறித்து அவர் கலந்துரையாடினார். (ஸ்ரீ-2)

# அமைச்சர் ஹக்கீமும் எம்.பிகளும் தமிழகத்திற்கு இரகசிய விஜயம்

சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் ஹக்கீம் உட்பட ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழகத்துக்கு இரகசியமாகச் சென்று வந்துள்ளனர்.

தமிழகத்தில் கடந்த 9 ம் திகதி முதல் 11ஆம் திகதி வரை நடைபெற்ற இம்மாநாட்டில் உலகின் பல நாடுகளில் இருந்தும் சுமார் ஆயிரம் வரையிலான தமிழ் ஊடகவியலாளர்களும்,எழுத்தாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இம்மாநாட்டில் இலங்கையிலிருந்தும் அரசியல்வாதிகள் உட்பட எழுத்தாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என சுமார் 150 பேர் கலந்து கொண்டிருந்தனர்.

நீதி அமைச்சரும், முஸ்லிம் காங்கிரசின் தலைவருமான ரவூப் ஹக்கீம், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும்,ஜனாதிபதியின் ஆலோசகருமான ஏ.எச்.எம்.அஸ்வர், பா. உ. ஹசன் அலி, பசீர் சேகு தாவூத், எம்.எஸ்.எம். அஸ்லாம் ஆகியோரும் இம் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழகத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்புணர்வு காரணமாக இவர்கள் தங்களை வெளியில் இனங்காட்டிக்கொள்ளாமல் இம்மாநாட்டில் கலந்து கொண்டதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

குறிப்பாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தன்னை எவரும் அடையாளம் கண்டுகொள்வதைத் தவிர்க்கும் வகையில் வழக்கமாக அணியும் மேற்கத்தைய உடையை அணியாமல், இலங்கை முஸ்லிம் மக்களின் பாரம்பரிய ஆடைகளான சாரம், மேற்சட்டை மற்றும் தொப்பி அணிந்து கொண்டே தமிழகம் சென்றுள்ளார்.

கொழும்பிலிருந்து விமானம் மூலம் திருச்சியை சென்றடைந்த ரவூப்ஹக்கீம், அங்கிருந்து வாகனம் ஒன்றில் காயல் பட்டினம் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது. (ந)

# தேர்தலில் அனோமாவை களமிறக்க ஜே.வி.பி., ஐ.தே.க. கடும் போட்டி

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபை மேயர் பதவிக்காக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகாவை களமிறக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு தரப்பினருமே மாநகரசபைத் தேர்தலில் அனோமாவை போட்டியிட வைப்பதில் ஆர்வம் காட்டி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

எவ்வாறெனினும் ஐக்கிய தேசியக் கட்சியினரை விடவும் ஜே.வி.பியுடன் அனோமா பொன்சேகா நெருங்கிச் செயற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பி. வேட்பாளராக அனோமா நிறுத்தப்படலாம் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்தத் தகவலை ஜே.வி.பி. பிரசார செயலாளர் விஜித ஹேரத் நிராகரித்துள்ளார்.

பேச்சுவார்த்தைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# வீதியை செப்பனிட்டு தருமாறு மக்கள் கோரிக்கை

(மல்லாவி)

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஒட்டறுத்தகுளம் சந்தி தொடக்கம் கொல்ல விளாங்குளம் ஊடாகச் செல்லும் அம்பாள் புரம் வீதியானது செப்பனிடப்படாதுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் வாழும் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தமது அத்தியாவசிய தேவைகளுக்காகவும் பிற மாவட்டங்களுக்கு செல்வதற்கு மேற்படி பாதையூடாகவே பயணிக்கின்றனர்.

அத்தோடு வன்னிவிளாங்குளம் பாடசாலைக்கு செல்லும் 60 இற்கும் மேற்பட்ட மாணவர்களும் இப்பாதையையே பயன்படுத்தி வருகின்றனர். கடந்த காலங்களில் பல இலட்சம் ரூபா பணம் ஒதுக்கி வேலை ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஆரம்பமாகியது.

அவ்வேளையில் கிரவல் மற்றும் சல்லிக்கல் பறிக்கப்பட்டு சில மைல் தூரம் மட்டுமே பரவப்படுவதும் பின்னர் மழை காலங்களில் அவை நீரில் அடித்துச் செல்லப்படுவதுமாக வீதி செப்பனிடும் பணி நடைபெற்றது.

எனவே உரிய பொறுப்பதிகாரிகள் மேற்படி வீதியில் கவனமெடுத்து மக்களின் அன்றாட தேவைக்கு உதவும் வீதியாக அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இவ்வீதியானது 8 மைல் தூரம் வரை செப்பனிடப்பட வேண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-15)

# விரிவுரையாளர்களின் பிரச்சினைக்கு ஒருவார காலத்திற்குள் தீர்வு

## உயர் கல்வியமைச்சு அறிவிப்பு

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு ஒரு வாரத்திற்குள் தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதாக உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய சிரேஷ்ட பேராசியர்களின் சம்பளத்தை ஒரு இலட்சத்து 15 ஆயிரம் ரூபா வரை உயர்த்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்தார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்மேளனமும் இந்த தீர்மானத்திற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் 12 வருடங்களுக்கான வாகன அனுமதிப்பத்திரத்திற்குப் பதிலாக எட்டு வருடத்திற்கான அனுமதிப்பத்திரத்தை விநியோகிக்கவும் உயர் கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

விரிவுரையாளர்களின் பிள்ளைகளை பாடசாலைகளில் அனுமதிப்பது தொடர்பாக நிலவிய பிரச்சினைக்கு ஏற்கனவே தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2-4)



யா/ அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் அண்மையில் பரிசளிப்பு விழா இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் உரையாற்றுவதையும் வித்தியாலய அதிபர் கு.ஜெகநாதன், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தெல்லிப்பழைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன், கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட டாக்டர் சி.மயில்வாகனம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# புகையிரத கட்டணங்களை அதிகரிப்பது குறித்து அரசாங்கம் ஆலோசனை

(கொழும்பு)

இலங்கைப் போக்குவரத்துச்சபை நட்டத்திலேயே இயங்கி வருகின்றது. இந்நிலையில் புகையிரதக் கட்டணங்களை அதிகரிப்பது குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

சிலாபத்திலிருந்து கொழும்புக்கான சொகுசு புகையிரத சேவையொன்றை கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 5.35 மணியளவில் சிலாபத்தில் ஆரம்பித்துவைத்த அமைச்சர் வெல்கம ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், போக்குவரத்துச் சபைக்கு அரசாங்கம் 5 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. எனினும் சபை நட்டத்திலேயே இயங்கி வருகின்றது. இதனை ஈடு செய்யும் வகையில் புகையிரத கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பில் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசாங்கத்தின் இணக்கத்தின் பேரில் அரச மற்றும் தனியார் பஸ் கட்டணங்கள் இம் மாதம் முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ஸ்ரீ-2)

# கனேடிய அரசுக்கு உதவ தயார்; ராதிகா சிற்சபேசன் தெரிவிப்பு

சட்டவிரோத கடல் பயணங்களால் கனேடிய அரசு எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வருகின்றமைக்கு உதவி செய்ய கனேடிய தமிழர்கள் தயாராக உள்ளனர் என்று அந்நாட்டின் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான ராதிகா சிற்சபேசன் தெரிவித்துள்ளார்.

இவர் கனேடிய ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இவர் இப்பேட்டியில்,

தமிழ் அகதிகளுக்கு உதவி செய்வதில் கனடா முன்னிலையில் இருந்து வருகின்றது. கனடாவில் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்கின்றனர்.

கனேடிய தமிழர்களாகிய நாம் மனித உரிமைகளை மேம்படுத்துகின்றமையில் முன்னிலை வகிக்கின்றோம். சட்டவிரோத கடல் பயணங்களால் குறிப்பாக புகலிடம் கோரி வருகின்ற தமிழ் அகதிகள் சம்பந்தப்பட்ட நெருக்கடிகளால் கனடா எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகளை எம்மால் தீர்த்து வைக்க முடியும் என்று மேலும் குறிப்பிட்டு உள்ளார்.

(ஸ்ரீ-2)



சுன்னாகம் அறிஞர் ஜயன்னா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறுவர்களின் அணிநடையையும் விருந்தினர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# சிறையில் சம்பவித்த மரணம் தொடர்பில் விசாரணை

(கொழும்பு)

மாத்தறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவர் தூக்கிலிட்டு தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக சிறைச்சாலைகள் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஒருவரே நேற்று முன்தினம் தற்கொலை செய்து கொண்டதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வி.ஆர். சில்வா கூறியுள்ளார்.

பிரேத பரிசோதனைகள் நிறைவடைந்தவுடன் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வெலிகம பகுதியைச் சேர்ந்த ஒருவரே மாத்தறை சிறைச்சாலையில் தற்கொலை செய்து கொண்டதாக அறியவருகிறது. (ஸ்ரீ-4)


வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தேர்தல்
23 ஜூலை 2011





த. நடனேந்திரன்
(கஜன்)
ஒற்றுமை, தேசியம்,
ஊழலற்ற அபிவிருத்திப் பணிகள்
இவற்றை உரியமுறையில்
நடைமுறைப்படுத்தப் பாடுபடுவேன்...
(3708)
இலங்கைத் தமிழரசுக் கட்சி
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
11


# ஹெட்ஜின் கொடுக்கல்-வாங்கல் தொடர்பில் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தப்படும்

## ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ஹெட்ஜின் கொடுக்கல்-வாங்கல் தொடர்பில் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட உள்ளதாக ஜே.வி.பி.கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

ஹெட்ஜின் கொடுக்கல்-வாங்கல்களுக்கான அபராதமாக அரசாங்கம் ஆயிரத்து 700 கோடி ரூபாவினை செலுத்த நேரிட்டுள்ளதாக கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

ஹெட்ஜின் கொடுக்கல்-வாங்கல்களுக்கான அபராதமாக அரசாங்கம் ஆயிரத்து 700 கோடி ரூபாவினை செலுத்த நேரிட்டுள்ளதாக கட்சி குறிப்பிட்டுள்ளது.

இந்த மோசடி தொடர்பில் நாடாளுமன்றத்தில் விரைவில் விசேட உரையாற்றப்படும் என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஒரு வங்கிக்கு ஆயிரத்து 700 கோடி ரூபா செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும் ஏனைய இரண்டு வங்கிகள் வழக்குத் தொடர்ந்துள்ளதாகவும் ஒட்டுமொத்தமாக 5 ஆயிரம் கோடி ரூபா செலுத்த வேண்டியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சுமையை நாட்டு மக்கள் மீது திணிக்கக்கூடாது எனவும் மக்கள் இது தொடர்பில் விழிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அபராதப் பணம் அரசியல்வாதிகளிடமிருந்து அறவீடு செய்யப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# உள்ளூர் சேவைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தீவகத்தில் அபிவிருத்தித் திட்டங்கள்

(கொழும்பு)

உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வுகள் வடமாகாண சபையால் உள்ளூராட்சிச் சபைகள் தோறும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதில் நான்காம் நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் தீவகத்தில் இடம்பெற்றன.

இந்நிகழ்வுகளில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் ரிசாட் பதியுதீன், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் நெடுந்தீவு பிரதேச சபையின் யாகப்பர் கோவில் காழாமுனை வீதி, காரைநகர் பிரதேச சபையின் ஊரி முருகன் கோவில் வீதி, ஊர்காவற்றுறை பிரதேச சபையின் மெலிங்சிமுனை வீதி திருத்த வேலைகளை அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்தார்.

அதேவேளை வேலணை, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை பிரதேச சபைகளின் உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களான சங்கத்தார் கேணி வீதி, இராசையா வீதி, தெற்கு சுடலை விகாவடி வீதி, முருகன் கோவில் கோபாலப்பிட்டி வீதி, அனலைதீவு கடையடி குறுக்குத் தெரு வீதி ஆகியவற்றில் புனருத்தாரண வேலைகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. (ஸ்ரீ-2)

# புலிகளுடன் இணைந்து செயற்பட்ட முகவர்கள் தொடர்பில் விசாரணை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட்ட முகவர்கள் தொடர்பில் மீள விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கென புலனாய்வுப் பிரிவினரால் கடந்த இருபது ஆண்டுகளாக திரட்டப்பட்ட தகவல்கள் பரிசீலிக்கப்படவுள்ளன.

பல்வேறு படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்கள் தற்போது புலம் பெயர்ந்து வாழ்வதாக அரசாங்கத்திற்கு தகவல் கிட்டியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர்களினாலேயே இந்த தரவுகள் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் வெளிநாடு சென்று தங்களது பெயரை மாற்றிக் கொண்டுள்ள போதிலும் அரசாங்கத்திற்கு தகவல்களை வழங்கிய தமிழர்கள் அவர்களை அடையாளம் கண்டுள்ளனர்.

இவ்வாறு வெளிநாடுகளில் வாழும் குற்றவாளிகள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் தகவல்களை மீளத்திரட்டி வருகின்றனர்.

வெளிநாடுகளில் வாழும் புலி முகவர்கள் வேறு பெயர்களில் இலங்கைக்கு சில சந்தர்ப்பங்களில் விஜயம் செய்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)






மாபெரும் பிரமாண்டமான ஆடித்தள்ளுபடி
(சீ-3802)
நல்லூர்
சரவணா ரெக்ஸ்
ஆடி என்றாலே சரவணா தான்
வாடிக்கையாளர்களின் நலன்கருதி விஸ்தீரணமான இடத்தில் மலிவு விற்பனை நடைபெறும்
விதம்விதமான எண்ணற்ற தெரிவுகளுக்கு...
இந்தியாவில் இருந்து விசேடமாக இறக்குமதி செய்யப்பட்டது
- இந்தியன் பட்டுச் சாறிகள்
- சில்க்ஸ் சாறிகள்
- சீக்குன்ஸ் சாறிகள்
- கொட்டன் சாறிகள்
- சில்க் பஞ்சாபித் துணிகள்
- கொட்டன் பஞ்சாபித் துணிகள்
- றெடிமெட் பஞ்சாபிகள்
- ஸ்கேட் அன் பிளவுஸ்கள்
- ஆண்களுக்கான சேட், ரி சேட், றெடிமேட் ஜீன்ஸ்கள், ஜீன்ஸ் துணிகள், வேட்டிகள் என்பன பல பல டிசைன்களில் பல தெரிவுகளில் மாபெரும் மலிவு விற்பனையில் பெற்றுக் கொள்ளலாம்.

இடம்:- சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை (கெங்காதரன் மருத்துவமனை அருகாமை),
கே.கே.எஸ். வீதி, தட்டாதெரு சந்தியில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.
காலம்:- 09.07.2011 தொடக்கம் 31.07.2011 வரை நேரம்:- காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை
யாவரும் எதிர்பாராத மாபெரும் மலிவு விற்பனை
குறிப்பு:- ஆடித் தள்ளுபடியை முன்னிட்டு ஏழு நாட்களும் வியாபாரம் நடைபெறும்.

# யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தி பணிகளுக்கு போதியளவு நிதியுதவி கிடைக்கப்பெறவில்லை

## ஐ.நா. மனிதாபிமான உதவிகளுக்கான ஆணைக்குழு தெரிவிப்பு

யுத்தத்தின் பின்னரான அபிவிருத்திப் பணிகளுக்கு போதியளவு நிதி உதவிகள் கிடைக்கப் பெறுவதில்லை என ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான உதவிகளுக்கான ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அபிவிருத்திப் பணிகளுக்கு தேவையான மொத்த நிதி உதவிகளில் 21 வீதமான நிதி உதவியே கிடைக்கப் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு மனிதாபிமான உதவிகளுக்காக மொத்தமாக 289 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுவதாகவும் இதுவரையில் உதவி வழங்கும் நாடுகள் 62 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மட்டுமே உதவியாக வழங்கியுள்ளன.

யுத்தத்தின் பின்னர் மீள் குடியேற்றப்பட்ட பெருந்தொகுதி மக்கள் தமது வாழ்வாதாரங்களை தொடர்வதில் இடர்களை எதிர்நோக்கி வருவதாகவும் குறிப்பாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோர் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உதாரணமாக கிளிநொச்சியில் 3 ஆயிரத்து 168 மீனவ குடும்பங்கள் இருப்பதாகவும் 320 பைபர் கிளாஸ் படகுகளே காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மீனவர்கள் மட்டுமன்றி விவசாயிகள் உள்ளிட்ட ஏனைய தொழில்களில் ஈடுபடுவோரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட யாழ்.நகர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய இன்று காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை றக்கா வீதியில் அமைந்துள்ள இளஞ்சிங்கம் சனசமூக நிலையத்திலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை நாவலர் வீதியில் அமைந்துள்ள பாப்பையா கடைச் சந்தியிலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே, இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி ஊசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையை களங்கத்திற்குரிய நாடுகளின் பட்டியலிலிருந்து நீக்குதல் வேண்டும்

## ஐ.நா.விடம் பாலிதஹோகண கோரிக்கை



தமது நாட்டை ஐக்கிய நாடுகள் சபை களங்கத்துக் குரிய பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்று இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலத்தில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை மற்றும் நடவடிக்கைக்குழு என்பன இலங்கையை இந்தப் பட்டியலில் இணைத்திருந்தன.

சிறுவர்களை படைகளில் இணைத்தல் உட்பட்ட பல்வேறு குற்றச்செயல்கள் காரண மாகவே இந்தப் பட்டியலில் இலங்கை இணைக்கப்பட்டிருந்ததாக ஐக்கிய நாடுகளின் இலங்கைக்காக வதிவிடப் பிரதிநிதி பாலித ஹோகண தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்த சிறுவர் படையினர் விடுவிக்கப்பட்டனர். அதே நேரம் பிள்ளையான் தரப்பும் தமது சிறுவர் படையை கலைத்து அவர்களை குடும்பங் களுடன் இணைத்துள்ளது.

எனவே இலங்கையை களங்கத்திற்குரிய நாடுகளின் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்று ஹோகண கோரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ-4)

# ஊழலற்ற உள்ளூராட்சி மன்றமொன்றை கண்டுபிடிப்பது கடினமாகியுள்ளது

## ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு ஆட்சியில் ஊழலற்ற உள்ளூராட்சி மன்றமொன்றை கண்டுபிடிக்க முடியாது உள்ளதென எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடுகின்றார்.

பிலியந்தலை பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே எதிர்க்கட்சி தலைவர் இதனைக் கூறியுள்ளார்.

அனைத்து உள் நூராட்சி மன்றங்களிலும் பணமோசடி இடம்பெறுவதாக தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க ஊழலற்ற உள்ளூராட்சி மன்றமொன்றை கண்டுபிடிப்பது கடினமாகி உள்ளதெனவும் குறிப்பிட்டுள்ளார்.

நீர் கலந்த எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு அதிகாரிகள் தயங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஹெஜின் உடன்படிக்கை காரணமாக அரசாங்கம் பெருந்தொகை பணத்தை செலுத்த வேண்டியுள்ளதாக கூறிய எதிர்க்கட்சித் தலைவர் அந்த சுமையை மக்களே சுமக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சர்வதேச குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில் போரில் உயிரிழந்தோர் விபரம் வெளியீடு

## பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை

சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

கடந்த 1981 ஆண்டு சனத்தொகை மதிப்பீடு மற்றும் பிறப்பு,இறப்பு பதிவுத்தகவல்களின் அடிப்படையில் வடக்கு போரின் போது உயிரிழந்தவர்கள் பற்றிய புள்ளி விபரங்கள் வெளியிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சினால் இந்த நட வடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது.

போரின் போது பொதுமக்கள் கொல்லப்பட்டதாக சர்வதேச ரீதியில் வெளியிடப்படும் குற்றச்சாட்டுகளுக்கு உரிய பதிலளிக்கும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

1981 சனத்தொகை மதிப்பீட்டை அடிப்படையாக கொண்டு போரின் போது உயிரிழந்த பொதுமக்களின் புள்ளி விபரங்கள் வெளியிடப்படவுள்ளன.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை சர்வதேச ரீதியில் சாதகமான நிலைப்பாட்டை ஏற்படுத்தும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# டெங்கு தொற்றை கட்டுப்படுத்த பாரிய சுத்திகரிப்பு நடவடிக்கை

டெங்கு தொற்றை கட்டுப்படுத்தும் நோக்கில் மேலும் ஒரு பாரிய சுத்திகரிப்பு நடவடிக்கைகள் கொழும்பு நகரினுள் விரைவில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

முன்னர் மேற்கொள்ளப்பட்ட சுத்திகரிப்பு நடவடிக்கைகள் அதிகளவிலான பலனை தரவில்லை என கொழும்பு மாநகர சபையில் பிரதம மருத்துவ அதிகாரியின் காரியாலயம் தெரிவித்துள்ளது.

டெங்கு தொற்று காரணமாக மரணமானவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைய புள்ளிவிபரத்தின் படி டெங்கு தொற்றுக்குள்ளான ஆயிரத்து 939 நோயாளர்களில் 12 பேர் மரணித்துள்ளனர்.

கொழும்பு நகர எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் இருந்து 25 முதல் 30 வரையிலான நோயாளர்கள் நாளாந்தம் சிகிச்சை பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

70 சதவீதத்திற்கும் மேற்பட்ட டெங்கு தொற்றுக்கள் பெரும்பாலும் கொழும்பு வடக்கு பிரதேசத்திலேயே பதிவாகியுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் மருத்துவ அதிகாரி குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-4)

# அமைச்சர்களுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றும் திட்டம் கைவிடப்பட்டது

## ஐ.தே.க.அறிவிப்பு

(கொழும்பு)


ஆளும் கட்சியின் இரண்டு சிரேஷ்ட அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானம் நிறைவேற்றும் திட்டம் கைவிடப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டிருந்தது.

தரம் குறைந்த பெற்றோலை இறக்குமதி செய்த குற்றத்திற்காக இவ்வாறு நம்பிக்கை இல்லாத தீர்மானம் நிறைவேற்ற ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டிருந்தது.

இதேவேளை முன் அறிவித்தல் இன்றி திடீரென நாடு தழுவிய ரீதியில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டமைக்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவிற்கு எதிராகவும் நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டிருந்தது.

எவ்வித காரணங்களும் முன்வைக்காது ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த யோசனைத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)



தெல்லிப்பழை கிழக்கு சித்தியம் புளியடி சித்தியம்பதி அருள்மிகு அண்ணமார் தேவஸ்தானத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசை விழா-2011 நிகழ்வு ஆலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் மாணிக்கவாசகர் சுவாமிகள் வீதி வலம் வருவதையும் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வே. கந்தசாமி ஐயா அவர்கள் பூசை செய்வதனையும் படத்தில் காணலாம்.

# கலாநிதி சோ.கிருஷ்ணராஜா நினைவுப் பேருரை-2011

21

## பல்வகைகள் ஒன்று சேர்தல்
## [Assemblage of Multiplicity]



சோ. கிருஷ்ணராஜா

முழுமையின் ஓர் அங்கம் குறையின் அது முழுமையாகாது. அது அங்கம் குறைந்த ஒன்றே. அதே போல 19ஆம் நூற்றாண்டின் பின்னரான ஈழத்துத் தமிழரின் பன்பாட்டை முன்சொன்ன அனைத்து அங்கங்களும் சேர்ந்தே உருவாக்கியுள்ளன.



கலாநிதி மௌனகுரு
யாழ் பல்கலைக்கழகம்


அதில் கோடாலி கண்ணப்பரும் வருவார். ஆனந்த குமாரசாமியும் வருவார். ஆனைக் குட்டியும் வருவார் வித்தியானந்தனும் வருவார். இவர்கள் போல் இன்னும் பலரும் பல போக்குகளும் வரும். அனைத்தும் இணைந்ததே பண்பாடு.

ஆன்மா எல்லா உயிர்களிலும் இருப்பது போல, பண்பாடு எல்லாப் போக்குகளிலும் உண்டு. எல்லாவற்றினது சேர்க்கைகளுமே பண்பாடு. பண்பாடு என்பது சேர்க்கைதான். ஆன்மாவில் உயர்வு தாழ்வு இல்லை என்பது போல, பண்பாட்டிலும் உயர்வு தாழ்வு இல்லை. 19ஆம் நூற்றாண்டின் பின்னர் எழுந்த அனைத்துப் போக்குகளையும் உள்ளடக்கியதே இலங்கைத் தமிழர் பண்பாடாகும். அதிற்கூட உயர்வு தாழ்வு இல்லை. பெரிது சிறிது இல்லை.

**பரதமும் கூத்தும் சமமே**
**செவ்வியல் இசையும் சமமே**
**கோயிற்றேரும் கூத்துத் தேரும் சமமே**
**மிருதங்கமும் மத்தளமும் பறையும்**
**சமமே**
**நாதஸ்வரமும் சொர்ணாளியும்**
**சமமே**
**அரசர் கடவுள் புகழ்பாடும் இலக்கி**
**யமும்**
**அடக்கப்பட்ட மக்கள் வாழ்வு கூறும்**
**இலக்கியமும் சமமே.**
**கோயிற் கடவுளரின் சிற்பத்திலான**
**திருமுடியும்**
**கூத்துக்கலைஞரின் மரத்திலான**
**அலங்கார முடியும் சமமே**
**ஆனந்த குமாரசாமியும் ஆனைக்**
**குட்டியும் சமமே**
**ஏன் சமமெனில் அவை ஒவ்வொன்றும்**
**தம்மளவில் பூரணமானவை.**

இவற்றிற்கிடையே உயர்வு தாழ்வு இல்லை.

### 19 ஆம் நூற்றாண்டின் பின் ஈழத்தமிழர் மத்தியில் உருவான கலை - இலக்கியப் போக்குகளை தெரிந் தெடுக்கப்பட்ட சிலருக்கூடாகப் புரிந்து கொள்ளல்



பிரம்மத்தை அறிய மாயையைக் களைதல் போல, நம்முன் உள்ள நடைமுறை உண்மையை அறிய, நம் முன்னுள்ள பேதம் என்ற மாயையை களைந்து, அபேதம் என்ற ஞானத்தினைப் பெறவேண்டும்.

**நன்றிது தேர்ந்திடல் வேண்டும்.**
**இந்த ஞானம் வந்தால் பின் நமக்**
**கென்ன வேண்டும்.**

(முற்றும்)

# நோய்பரப்பும் நுளம்புகளில் ஆய்வு

11

இதில் முக்கியமாக இரசாயனக் கட்டுப்பாடுகளை செயற்படுத்த தேவையான ஒத்துழைப்புக்கள் அரச, அரசசார் பற்ற நிறுவனங்கள் ஊடாக பற்பல வழிகளில் பெறப் பட்டன.

இதில் சூழல் சுற்றாடல் மாசு படுத்தப்படாத வகையில் பூச்சியியல் ஆய்வு வன்னியில் முன்னெடுத்துச் செயற்படுத்தப்படுகிறது. இவற்றில் மனித சமுகத்தின் மேம்பாட்டிற்கு ஏற்ற நவீன முறையிலான பற்பல புதிய வழி முறைகளையே கருத்திற் கொண்டு செயற்பட வேண்டியுள்ளது. இயற்கையோடு ஒன்றிய மனித வாழ்க்கை முறைகளினூடாக இணைந்த வாழ்வுமுறையையே நுளம்புகளும் கொண்டுள்ளன என்பதை நோக்குமிடத்து மனிதனால் உண்டாக்கப்படும் செயற்கை முறைகளுக்கேற்ப இவையும் தம்மை, தம் இனத்தின் பழக்க வழக்கங்களையும் கூட மாற்றி அமைத்துக் கொள்கின்றன என்பது உயிரியல் பரிணாமத்தில் கண்டு கொண்ட விடயமாகும். இவ்வியற்கை அமைப்புக்கிணங்க எந்த ஒரு உயிரினமும் மாறுபட்டவை அல்ல. எனவே பூச்சயியல் ஆய்வு மனிதத்துவத்தையும் உயிரினத்துவத்தையும் ஒருங்கிணைப்பதான செயற்பாட்டு அம்சம் ஆகும். இதன் அடிப்படையிலேயே வன்னியில் பூச்சியியல் ஆய்வு பற்பல விடயங்களை விஞ்ஞான தொழில் நுட்ப அடிப்படையில் புதுப்புது விடயங்களை வெளிக் கொணர்ந்துள்ளது என்பதாகும். இவ்வாராய்ச்சியின் முதற் கட்டமாகவே அனோபிலஸ் கியூலிசிபேசிஸ் நுளம்புகளின் அடர்த்தியை வன்னியில் உயிரியல் முறையிலும் இயற்கையோடு ஒன்றிய முறையிலும் கட்டுப்படுத்தியதன் மூலம் மலேரியா பரவுவதை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரக்கூடியதாக இருந்தது.

**டெங்குக் கட்டுப்பாடும் தடுப்பும்**

டெங்கு பருவகால நோயாக இலங்கையிலும், வன்னியிலும் முக்கியமாக மழைக்காலமான மாரி காலத்தில் தோன்றி மறையும் ஒரு நோயாகும். இக்கால இடை வெளியானது ஐப்பசிமாதம் தொடக்கம் மாசி முற்கூற்றைக் கொண்ட கால இடைவெளியை குறிப்பிடலாம். இக்காலத்தில் வேண்டத்தகாது என வீசியெறியப்பட்ட சகல கழிவுப் பொருட்கள் உட்பட முக்கியமாக இன்று பிளாஸ்டிக் பொருட்களே பாரிய அச்சுறுத்தலாக இருக்கின்றன. இதைத்தவிர ரயர்கள், பூச்சாடிகள், சாப்பாட்டு மேசைக்கு எறும்பு ஏறா வண்ணம் பாவிக்கும் பாத்திரங்கள், கூரைப்பீலிகள், ஏன் தண்ணீர்த் தாங்கித் தொட்டிகள் என்பவற்றிலும் டெங்கு நுளம்புகள் பல்கிப் பெருகுவதனால், முக்கியமாக வீட்டைச்சுற்றி சுற்றாடல் சுகாதாரத்தைப் பேணுவதன் மூலம் மழை காலங்களில் எந்தப் பொருட்களிலும் மழைநீர் தேங்க விடாது வருமுன் காக்கும் நடவடிக்கையில் ஒவ்வொருவரும் இறங்கித் தொழிற்படுவதுடன், அயலில் உள்ளவர்கட்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்களையும் அவர்களது வீட்டுச் சுற்றாடல் சுகாதாரத்தைப் பேண விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் எம்மையும் காத்து மற்றைய அயலவர்களையும் காப்பாற்ற முடியும். இந்நோயின் உச்சப்பரம்பல் நிலையில் மட்டும் தொழில் நுட்ப மலத்தியனை மண்ணெண்ணெய்யுடன் கலந்து புகையடிப்பதன் மூலம் டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்துதல்.

சாதாரண நிலையில் இம்முறை பயனற்றதும் மிகவும் செலவான விடயமுமாகும். குடம்பிகளை அழிப்பதுகூட மக்களின் பங்களிப்பினாலேயேயாகும். சகலரும் வருமுன் காக்கும் நடவடிக்கையாக தத்ததமது வீட்டின் சுற்றாடல் சுகாதாரத்தை பேணுவதன் மூலமே இந்நோய் பரம்புவதை தடுக்கமுடியும். இதனாலேயே சுகதாரத்திணைக்களம், பொது சுகாதாரத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட சுகாதா கல்வியூட்டலுடனான விழிப்புணர்வுக் கலந்துரையாடல்கள், கூட்டங்கள், விரிவுரைகள் மற்று சகல விதமான ஊடகங்கள் வாயிலாகவும் பொது மக்களாகிய சகல மட்டத்தினருக்கும் இச்செய்தியை எடுத்துச்சென்று வழங்குவதனால் மட்டுமே இந்நோய் வராது தடுக்கக்கூடியதாக வன்னியில் இருந்தது, இருக்கிறது, இருக்கும். டெங்குக்காய்ச்சல் நோயாளி வேறு இடங்களிலிருந்து வன்னிக்கு வந்தாலும் இங்குள்ள டெங்கு நுளம்புக் காவி நுளம்புகளின் அடர்த்தி பிறிற்றோ குறியீட்டிற்கு 20% குறைவாக இருக்கும் பட்சத்தில் நோய் பரம்பலுக்கு வாய்ப்பான ஏதுக்கள் இல்லை என்பது புலப்பாடு.

Dr ம.இராசதுரை,
இம்பர் சிட்டி,
பருத்தித்துறை.

(தொடரும்)


# வெள்ளைத் தாடி... துள்ளல் நடை! வந்துவிட்டார் ரஜினிகாந்த்

சிங்கப்பூர் மவுண்ட் எலிசபெத் மருத்துவ மனையில் ஒன்றரை மாதங்கள் சிகிச்சை முடிந்து மீண்டும் சென்னை மண்ணில் கால் வைத்திருக்கிறார் ரஜினிகாந்த்.

கடந்த 13 ஆம் திகதி மீனம்பாக்கம் விமான நிலையத்தில் ரஜினி வந்து இறங்க... மாநிலத்தில் பல பகுதிகளில் இருந்து வந்த ரசிகர்கள் தேனீக்களைப்போல் மொய்த்தனர்.

"சாமியே ரஜினியே..." கடவுளே ரஜினியே...என்று ரசிகர்கள் எழுப்பிய ரஜினி கோசம் விமானச் சத்தத்தை மீறி ஒலித்தது. எந்த வழியால் ரஜினி வெளியே வருவார் என்ற தகவலை அதிகாரிகள் வெளியிடாமல் இருக்கவே ரசிகர்கள் தவித்துக் கொண்டு அலை பாய்ந்தனர். கடைசியில் வி.வி.ஐ.பி-க்களுக்கான 6ஆம் எண் வாசல் வழியாகத்தான் ரஜினி வருகிறார் என்று தெரியவந்ததும், அங்கே எல்லோரும் குவிந்தனர். ரஜினி வரும் வழி முழுக்க பொலிஸ் குவிக்கப்பட்டது.

விமான நிலையத்தில் சில அடிகள் நடப்பார். சுற்றி உள்ள மீடியா மற்றும் ரசிகர்களுக்கு கை அசைப்பார். பின்னர் தன் இன்னோவா காரில் புறப்படுவார் என்று பலர் கற்பனைக் குதிரையை ஓடவிட்டனர். வேறு சிலர், ரஜினி வீல்சேரில் வருவாரோ... ஒருவேளை யாருக்கும் தெரியாமல் அவர் போயஸ் கார்டன் போய்விடுவாரோ? என்று சந்தேகத்தை எழுப்பினர்.



சரியாக இரவு 10 மணிக்கு 6ஆம் எண் வாசல் வழியாக அனைவரின் அனுமானத்தையும் தவிடுபொடியாக்கி, சிங்கம் ஒன்று புறப்பட்டதே... ஸ்டைலில் குதித்து வந்தார் ரஜினி. ரசிகர்கள் கூட்டத்தில் அவரது இனோவா கார் மிதந்தது. இரவு 10 மணிக்கு மேல் பெண்கள் கூட்டம் பெரும்திரளாகக் கூடியதைப் பார்த்து பலரும் ஆச்சரியத்தில் புருவம் உயர்த்தினர்.

ஆனாலும் ரஜினியை வரவேற்க ஒரு சினிமா புள்ளிகூட வரவில்லை. நடிகர் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் எட்டிப் பார்க்கவில்லை. மீனம்பாக்கத்தில் மேடை அமைத்து மீடியாவுக்குப் பேட்டியும், ரசிகர்களுக்கு நன்றியும் சொல்லும் விதமாக முதலில் திட்டமாம்.

"உங்களுக்கு கிட்னி கோளாறா?" என்பது போன்ற கேள்விகளால் ரஜினி மனசு சங்கடப்படும் என்பதால், அந்தத் திட்டத்தை தவிர்த்து விட்டனர்.

போயஸ் கார்டன் வீட்டில் ரஜினியை தங்க வைத்தால், குசலம் விசாரிக்க அதிக எண்ணிக்கையில் ஆட்கள் வருவார்கள். அவரது ஆரோக்கியம் பாதிக்கப்படலாம் என்பதால், கேளம்பாக்கம் பண்ணை வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

1984 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். ஆட்சியில், ஆசிரியர்கள் பிரச்சினை, அரசு ஊழியர்கள் போராட்டம் என்று பல பிரச்சினைகள் தலைவிரித்து ஆடின. ஆட்சியும் தடுமாறத் தொடங்கியது. அந்தச் சமயத்தில் எம்.ஜி.ஆரின் உடல் நிலை திடீரென பாதிக்கப்பட்டதும்... உடனே, எம்.ஜி.ஆர். மீது இருந்த சின்னச் சின்னக் கோபதாபங்களை மறந்துவிட்டு, தமிழ்நாடே அலகு குத்தி, பாற்குடம் எடுத்து அவர் நலம்பெற வேண்டும் என இறைஞ்சியது.

அதுபோலவே, கடந்த தி.மு.க. ஆட்சியில் தமிழ் சினிமாவே கருணாநிதி குடும்பத்தின் பிடியில் அகப்பட்டு தவித்துக்கொண்டு இருந்தது. அந்த நேரத்தில் ரஜினியோ, கருணாநிதியின் குடும்பக் கல்யாணத்துக்காக மதுரைக்குப் போனார். அந்தக் கட்சியின் விழாக்களிலும் கலந்து கொண்டார். இதனால் சினிமாக்காரர்கள், ரசிகர்கள், பொது மக்கள் மத்தியிலும் ரஜினி மீது சின்னக் கசப்பு இருந்தது.

ஆனால், ரஜினி எப்போது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டாரோ... அடுத்த நிமிடமே அத்தனை கசப்பும் காணாமல் போக... தமிழ் நாட்டில் மசூதி, சேர்ச், கோயில் என எல்லா இடங்களிலும் மனமுருகப் பிரார்த்தனைகள் செய்தனர். இதோ வெள்ளைத் தாடியோடு மீண்டும் துள்ளி வந்துவிட்டார் ரஜினி!

# கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்கள் அடிப்படை வசதிகளின்றி பெரும் அவலம்



கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்கள் தமது அன்றாட தேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

அரசாங்கத்தினாலும் உதவி நிறுவனங்களினாலும் பல்வேறு உதவிகள் கிடைக்கின்ற போதிலும் அந்த மக்களில் பலருக்கு அடிப்படைவசதிகள் போதிய அளவில் செய்து கொடுக்கப்பட வில்லை என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடிநீர், சுகாதார வாழ்வாதார உதவிகள், காணிகள், வீட்டுத்திட்டம் போன்ற பல்வேறு விடயங்களில் இந்த மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டிருக்கின்றார்கள். உமையாள்புரம் பகுதியிலும் இவ்வாறான பிரச்சினைகள் இருப்பதாக அங்குள்ள பெண்கள் தெரிவித்துள்ளனர்.

வாழ்வாதார உதவியாக கோழி வளர்ப்புக்கான உதவிகள் வழங்கப்பட்ட போதிலும் அவை வெற்றியளிக்கவில்லை. பல குடும்பங்கள் அன்றாடம் கூலித்தொழிலை நம்பியே சீவியம் நடத்த வேண்டியுள்ளது. இப்பகுதியில் குடிநீர், காணி என்பன முக்கிய பிரச்சினைகளாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல வருடங்களாகக் குடியிருந்த போதிலும் இங்குள்ளவர்களுக்கு காணிகள் இன்னும் சொந்தமாக்கப்படவில்லை. அத்துடன் பரந்தன் இராசயனத் தொழிற்சாலைக்குரிய காணிகளில் குடியிருக்கும் குடும்பங்கள் அந்தக் காணிகளை விட்டு வெளியேற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளியேறும் குடும்பங்களுக்கு தர்மபுரம் பகுதியில் இந்திய உதவித்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டித்தரப்படும் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும் அதற்குரிய உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை என பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

பல வருடங்களாகக் குடியிருந்த போதிலும் சொந்தமாக்கப்படாத காணிகளில் எவ்வாறு கிணறு வெட்ட முடியும் என இந்த மக்கள் கேள்வி எழுப்புகின்ற அதேவேளை அருகில் உள்ள நீர்ப்பாசன வாய்க்காலில் குளிப்பதுடன் அயலில் உள்ள கிணறுகளில் உரிமையாளர்களின் வேண்டா வெறுப்புக்கு மத்தியில் குடிநீரைப் பெற வேண் டியிருப்பதாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் காணிப்பிரச்சினைகள் மிக அதிகமாக இருப்பதாகவும் இவற்றிற்குத் தீர்வு காணும் வகையில் அரசாங்கம் ஒரு கொள்கையை வகுத்துள்ளதாகவும் அதுபற்றிய சுற்றறிக்கை வெளியாகியதும் காணிப்பிரச்சினைகளுக்குத் தீர்வேற்படும் என்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# டெங்கு காய்ச்சலால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 82 ஆக உயர்வு

(கொழும்பு)

இந்த வருடம் இதுவரை 11 ஆயிரத்து 687 டெங்கு நோயாளர்கள் இனம்காணப்பட்டுள்ளதோடு டெங்கு காய்ச்சலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 82 ஆக உயர்வடைந்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் அதிகப்படியாக நான்காயிரத்து 506 டெங்கு நோயாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை ஆயிரத்து 497 பேர் கம்பஹா மாவட்டத்திலும் 673 பேர் களுத்துறை மாவட்டத்திலும் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வருடம் ஜூன் மாதத்தில் மூவாயிரத்து 412 பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தில் இதுவரை ஆயிரத்து 478 பேர் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

(ஸ்ரீ-2-4)

# இலங்கையுடன் இந்தியா வெளிப்படையான பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

இலங்கை பிரச்சினையில் அந்நாட்டு அரசுடன் இந்தியா வெளிப்படையான பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் பி.டி.ராஜா தெரிவித்துள்ளார்.

பொங்களூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான கொடுமைகள் நடந்து வருகின்றன. அங்கு மனித உரிமை மீறல் நடந்து வருகிறது. இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க பிரதமர் மன்மோகன் சிங் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கை அரசு சர்வதேச போர் விதி முறையை மீறிச் செயற்பட்டது.

தமிழர்கள் மீதான அத்துமீறல் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டன. ஆனால், இதைக் கண்கூடாகப் பார்த்துக் கொண்ட இந்திய அரசு மௌனம் காக்கிறது. இலங்கை தமிழர் பிரச்சினையில் அரசியல் ரீதியான தீர்வு அவசியம். பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அந்த அரசுடன் இந்தியா வெளிப்படையான பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றார்.

(ஸ்ரீ-2)

# ஆடி மாத இராசி பலன்கள்




(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதம்)

தொழில் வளர்ச்சி கூடும்!

*வெல்லும் வாழ்விற்கு நல்ல யோசனைகளைச் சொல்லும் மேட இராசி நேயர்களே!*

செவ்வாயின் ஆதிக்கத்தில் பிறந்த நீங்கள் எதிரியின் பலத்தை எடைபோட்டு பார்ப்பவர்கள். ஒரு காரியத்தை தொடங்கும் பொழுது பங்குதாரர்கள் தடுத்தால் உடனடியாக உதறித்.தள்ளிவிட்டு விலகி விடுவீர்கள். உடன்பிறப்புகளின் மேல் உங்களுக்கு பாசம் குறைவாக இருந்தாலும் உங்கள் மேல் உடன்பிறப்புகளுக்கு பாசம் அதிகமாகவே இருக்கும். ஏமாற்றுக்காரர்களை இனம் கண்டுபிடிப்பதில் முதல் ஆளாக இருப்பீர்கள்.

உங்களுக்கு இந்த ஆடிமாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே சுகாதிபதி சந்திரன் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். சுக ஸ்தானத்தில் பஞ்சமாதிபதி சூரியன் சஞ்சரிக்கிறார். எனவே தொழில் வளர்ச்சி மேலோங்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். வாகன யோகத்தில் வளர்ச்சி காண்பீர்கள். வருமானம் திருப்தி தரும்.

சென்ற மாதத்தில் நீங்கள் தீட்டிய திட்டங்கள் இந்த மாதத்தில் படிப்படியாக நிறைவேறும். அரசியல்வாதிகள் ஆதரவோடு நல்ல காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். புத- ஆதித்ய யோகம் இருப்பதால், கல்விக்காக எடுத்த முயற்சி கை கூடும். கனவுகள் நனவாகும். ஜென்ம குருவால் பயணங்கள் அதிகரித்தாலும் ஆதாயம் கிடைப்பதில் குறைவு ஏற்படாது.

வாக்கு ஸ்தானத்தில் செவ்வாயுடன் கேது சஞ்சரிக்கிறார். எனவே கடும் சொற்கள் அதிகம் வரலாம். கொஞ்சம் யோசித்து பேசுவது நல்லது. நெல்லை கொட்டி விட்டால் அள்ளலாம். சொல்லைக் கொட்டி விட்டால் அள்ள முடியாது என்பார்கள். எனவே மற்றவர்கள் மனம் புண்படாத விதத்தில் தகவல்களைச் சொல்வது நல்லது. சனியின் ஆதிக்கத்தால் உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பாராத சலுகைகள் கிடைக்கும்.

இராசிநாதன் செவ்வாய் எதிர்வரும் 24 ஆம் திகதி மிதுன இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக சகோதர ஸ்தானம் பலப்படுகிறது. இதுவரை எதிரியாக இருந்த சகோதரர்கள் இனி இணக்கமாக நடந்து கொள்வர். சொத்துக்களில் ஏற்பட்ட பாகப் பிரிவினை சுமுகமாக முடியும். குரு பலத்தோடு தொடங்கிய மாதத்தில் செவ்வாய் பார்வை சனியின் மீது பதிவதால் உத்தியோகத்தில் இருப்பவர்கள் அருகில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது.

குருவின் பார்வை பலத்தால் 5,7,9 ஆகிய இடங்கள் புனிதமடைவதால் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படாது. இருப்பினும் அங்காரக வழிபாடு ஆனந்தத்தை வரவழைத்துக் கொடுக்கும்.

உங்கள் இராசி 2,7 க்கு அதிபதியாக சுக்ரன் சுக ஸ்தானத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

.தாய்வழி ஆதரவு பெருகும். வாகன மாற்றம் செய்யும் சிந்தனை மேலோங்கும். பழைய வாகனங்களை கொடுத்து விட்டு புதிய வாகனங்களை வாங்கி மகிழ்வீர்கள். சுக்ரனின் பர்ர்வை செயல் ஸ்தானத்தில் பதிவதால் ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். தங்கம், வெள்ளி தானாக வந்து சேரும்.

இம்மாதம் ஜென்ம இராசியில் சஞ்சரிக்கும் குருவின்·பார்வையைப் பலப்படுத்த குரு தட்சணாமூத்தியை வியாழன்தோறும் வழிபட்டு வருவது நல்லது.

இம்மாதம் இனிய மாதம் தான். எல்லா காரியங்களுக்கும் இல்லத்தில் உள்ளவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பிள்ளைகளின் கல்வி நலன் கருதி எடுத்தமுயற்சி கைகூடும். பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறப்போகின்றன. கணவன். ம்னைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும்.கட்டடம் கட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். இரண்டில் கேதுவும் அஷ்டமத்தில் இராகுவும் இருப்பதால் சர்ப்ப சாந்தி செய்தால் ஏற்ற இறக்கமில்லாத வாழ்க்கை அமையும். பொருளாதார வசதி பெருகும்.




(கார்த்திகை 2,3,4,ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்)

சொத்துக்களால் ஆதாயம் ஏற்படும்!

*மற்றவர்கள் மனக்குறையை அகற்றுவதற்கு மகத்தான வழிகூறும் இடப ராசி நேயர்களே!*

சுக்ரனின் ஆதிக்கத்தில் பிறந்த நீங்கள் பொதுமக்களின் ஆதரவு அதிகம் பெற்றவர்களாக இருப்பீர்கள். உங்களிடம் பணம் இருக்கிறதோ, இல்லையோ, மற்றவர்களின் பணம் உங்கள் கைகளில் புரளும்.

அடிப்படை வசதிகளான உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்றிற்கும் குறைவில்லாதவர்களின் பட்டியலில் இருப்பவர்களும் நீங்கள் தான். உங்கள் சிரித்த முகத்தால் நட்புகளை அதிகம் பெருக்கிக் கொள்வீர்கள்.

உங்களுக்கு இந்த ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் சுக்ரன் தன ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் பணம் தாராளமாக வந்து சேரும். இனத்தார் மற்றும் இணைந்திருப்பவர்கள் உங்களுக்கு உதவிக்கரம் நீட்ட முன் வருவர். மனதளவில் நீங்கள் நினைத்திருந்த காரியங்களை மறுபரிசீலனை செய்யாமலேயே செய்து முடிக்கலாம்.

இராகு-கேதுக்களின் ஆதிக்கத்தில் உங்கள் இராசி இருப்பதால், வரும் வருமர்னங்கள் அதிகமாக இருந்தாலும், உடனுக்குடன் செலவாகிவிடும். ஒருநாள் மகிழ்ச்சி, ஒருநாள் வளர்ச்சி, ஒருநாள் எழுச்சி, ஒருநாள் தளர்ச்சி என்று மாறி மாறி வந்து கொண்டேயிரு க்கும். இராகு-கேதுக்களுக்குரிய ப்ரீதியை முறை யாக நீங்கள் செய்தால், உங்கள் இலட்சி யங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறும்.

சகோதர ஸ்தானத்தில் சூரியனும், புதனும் கூடியிருப்பதால் உடன்பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். இதுவரை ஒத்துவராத சகோதரர்கள், சொத்துக்காக விலகிச் சென்றவர்கள், இனிமேல் அவர்களின் தேவையை முன்னிட்டு, உங்களை நாடி வருவர். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முன்வருவீர்கள். சனியின் ஆதிக்கத்தால் பிள்ளைகள் வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும்.

எதிர்வரும் 24 அம் திகதி மிதுன இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். விரயாதிபதி செவ்வாய், தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் விரயத்திற்கேற்ற தனலாபம் வந்து கொண்டே இருக்கும். சப்தமாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால், கல்யாண வாய்ப்புக்கள் கைகூடி வரும். வாழ்க்கைத்துணை வழியே ஏற்பட்ட கசப்பு நிலை மாறி, கனவு நிலை கைகூடி வரும். விற்ற சொத்துக்களால் கிடைக்கும் ஆதாயத்தைக் கொண்டு மற்றொரு சொத்தை வாங்க முன்வருவீர்கள்.

உங்கள் இராசிநாதன் சுக்ரன், வெற்றி ஸ்தானத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் சஞ்சரிக்கப் போகிறார்.

எனவே வழக்குகளில் வெற்றி கிட்டும் தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உயர்விற்கான அறிகுறிகள்

## சிவல்புரிசிங்காரம்

தோன்றும் பணி செய்யும் இடத்தில் பக்கத்தில் இருப்பவர்கள் ஒத்துழைப்பு கிடைப்பதோடு, சலுகையும் கிடைத்து மகிழ்ச்சியடைவீர்கள்.

இம்மாதம் மன நிம்மதி குறையாமல் இருக்கவும், மகிழ்ச்சிக்குரிய தகவல்களை மட்டுமே வரவழைத்துக் கொள்ளவும் ஜென்ம கேதுவை திருப்திப்படுத்துங்கள். விநாயகர் வழிபாட்டை வெள்ளிதோறும் மேற்கொள்ளுங்கள். இம்மாதம் உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு அதிகமாகவே கிடைக்கும் வாய்ப்பு உண்டு. உங்கள் பெயரில் சொத்துக்கள் வாங்கவில்லையே என்ற கவலை அகலும், கணவன்-மனைவிக்குள் அன்னியோன்னியம் அதிகரிக்கும்.

உங்களுக்கு பிரச்சி னைகளை கொடுத்தவர்கள் விலகிச் செல்வர். செவ்வாய் பெயர்ச்சிக்குப் பின் செல்வ நிலை உயரும். அரசியலில் ஈடுபட நினைப்பவர்களுக்கு வாய்ப்புகள் வந்து சேரும். மாதக் கடைசியில் நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும். சர்ப்பப்ரீதி செய்வது நல்லது.

(தொடரும்)

# இலங்கைப் பல்கலைக்கழகங்களில் 600 வெளிநாட்டு மாணவர்கள் அனுமதி

(கொழும்பு)

இந்த வருட கல்வியாண்டில் 600 வெளிநாட்டு மாணவர்களை இலங்கை பல்கலைக் கழகங்களில் அனுமதிப்பதற்கு உயர்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இவர்கள் தமது பட்டப்படிப்பு, முதுமாணி மற்றும் கலாநிதி பட்டங்களை இலங்கை பல்கலைக்கழகங்கள் மூலம் பெறுவார்கள். பெரும்பாலும் சார்க் உறுப்பு நாடுகளை சேர்ந்த மாணவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர ஜப்பான், ரஷ்யா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா மற்றும் ஆபிரிக்க நாடுகளில் இருந்தும் மாணவர்களை இலங்கை பல்கலைக்கழகங்களில் இணைய ஆர்வம் காட்டுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு மாணவர்கள் கொழும்பு, ஸ்ரீஜயவர்த்தனபுர, களனி, பேராதெனிய, ருகுனு, சம்பரகமுவ, ஊவாவெல்லச மற்றும் தென்கிழக்கு பல்லைக்கழகங்களிலேயே அனுமதிக்கப்படுவர்.

இந்த வெளிநாட்டு மாணவர்கள் இந்த பல்லைக்கழகங்கள் மூலம் பொறியியில், தகவல் தொழில்நுட்பம், முகாமைத்துவம், நீர்ப்பாசனம், வரலாறு , புதைபொருள் ஆராய்ச்சி, பௌத்தம் மற்றும் உயிர் பல்வகைமை உட்பட்ட துறைகளில் தமது உயர்கல்வியினை மேற்கொள்ள உள்ளனர். (ஸ்ரீ-4)

# தேர்தலுடன் தொடர்புடைய ஊர்வலங்கள் நடத்த தடை

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் தொடர்புடைய ஊர்வலங்கள் நடத்துவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதென தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.இத்தகைய ஊர்வலங்கள் நடத்துவதற்கான அனுமதி எந்த ஒ்வாரு தரப்பினருக்கும் வழங்கப்படவில்லை என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறவுள்ள அனைத்து மாவட்டங்களிலும் இந்த சட்டம் அமுலில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சில பகுதிகளில் தேர்தலுடன் தொடர்புடைய ஊர்வலங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறித்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான ஊர்வலங்களை நடத்துவதற்கு இடமளிக்க வேண்டாம் என பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# மருந்து கொள்வனவு நடவடிக்கைகளை கையாள அமைச்சரவை உபகுழு நியமனம்

(கொழும்பு)

மருந்து கொள்வனவு விநியோகம் உள்ளிட்ட முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நான்கு அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை. உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் சிரேஷ்ட அமைச்சர்களான கலாநிதி சரத் அமுனுகம, பேராசிரியர் திஸ்ஸ விதாரண மற்றும் அமைச்சர்களான பாட்டாலி சம்பிக்க ரணவக்க, சுசில் பிரேமஜயந்த ஆகியோர் அங்கம் வகிப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருந்து கொள்வனவு தொடர்பிலான தற்போதைய விலை மனுக்கோரல் நடைமுறையில் பல்வேறு சிக்கல்கள் நிலவுவதால் அதில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அமைச்சரவை உபகுழு மேற்கொள்ளவுள்ளது.

அவ்வப்போது ஏற்படும் மருந்து தட்டுப்பாட்டினை நீக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளும் இந்த குழுவின் ஊடாக செயற்படுத்தப்படும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரமொன்றுக்கு அமைவாக புதிய அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்



## ஆன்மீகம் 51

"சென்ற வருடம் என் மகனை வெளியூர் கல்லூரியில் சேர்த்தேன். முன்பெல்லாம் தினம் காலையில் குளித்து சுலோகம் சொல்பவன், இப்போது சாமி அறையையே அலட்சியம் செய்கிறான். ஒரு வருட ஹாஸ்டல் வாழ்க்கை அவன் பழக்க வழக்கங்களை அடியோடு மாற்றி விட்டதைக் கண்டு அதிர்கிறேன். அவனை திருத்துவது எப்படி?"

ஏதோ ஒன்றை எதற்குப் பழக்கமாக்கிக் கொள்கிறோம்? தனிக் கவனம் செலுத்தாமலேயே ஒரு செயல் நடப்பதால், வாழ்கைமுறை சற்று எளிதாகிறது. சுமை சற்று குறைகிறது. அவ்வளவு தானே!

அவரவர் வளரும் சூழ்நிலையைப் பொறுத்துத்தான் பக்குவமற்ற வயதில் சேகரித்த பழக்கங்கள் தொடர்கின்றன. அம்மாவையும் அப்பாவையும் இறுகப்பற்றிக் கொண்டு வாழும் குழந்தையால் தன் பழக்கங்களைக் கைவிட முடியாமல் போகின்றது. வெளி உலகைத் தரிசிக்காமல், அறிமுகமற்றவர்களிடம் நெருங்காமல், புதிய அனுபவங்களை எதிர் கொள்ளாமல் வளர்பவர்கள் தங்கள் பழக்கங்களிலிருந்து விலகாமல் சாரமற்ற வாழ்க்கையையே வாழ்கிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கும் நட்பு, நேரும் வாழ்க்கை என எல்லாமே எந்த வித்தியாசமும் இல்லாமல் அமைந்து விடுகிறது.

கூட்டுக்குள் சிறைப்படாமல், பூமியின் விதவிதமான முகங்களைத் தரிசிக்கும் வாய்ப்புப் பெற்றவர்களோ, பழக்கங்கள் என்ற அடிமைத்தனத்திலிருந்து விரைவில் விடுபடுகிறார்கள். பல திசைகளில் நடைபோட்டு உலகின் வீச்சை அளக்க முற்படுபவர்கள் தாம் வாழ்க்கையின் பல பரிமாணங்களை அனுபவரீதியாகப் பெறுகிறார்கள்.

கவனம் ஏதுமின்றி, ஒருசடங்காக உங்கள் மகன் சுலோகங்களைச் சொல்லி வந்ததனால், அந்தப் பழக்கம் விட்டுப் போயிற்று. ஒருவிதத்தில், இது நல்லது. முழுமையான கவனத்துடன் அவன் எதை அணுகுகிறானோ, அதுவே அவனுக்கு உண்மையான அனுபவத்தின் பரவசத்தைத் தரும்.

## கவனமற்ற பழக்கம் நல்லதல்ல

"நல்ல பழக்கங்கள் இருப்பவரைக் கூட கடவுள் பல விதங்களில் சோதிக்கின்றார். இருக்கும் நல்ல பழக்கங்களையும் ஏன் கைவிட வேண்டும்?"

நீங்கள் நல்ல வராகவே தொடர்கிறீர்கள் என்று சரிபார்க்க மறுபடி மறுபடி சோதித்துப் பார்க்கும் அளவு கடவுள் என்ன முட்டாளா? உண்மையில் உங்கள் குணங்கள் பிடித்துப் போனால், அவர் உங்களைக் கொண்டாட வேண்டுமல்லவா? அந்த அளவு கூட புரிந்து கொள்ள முடியாதவரை ஏன் கடவுளாக வைத்து இருக்கிறீர்கள்?

கடவுளுக்காக வாழ்வதை முதலில் நிறுத்துங்கள். உங்களுக்காக வாழுங்கள். நீங்கள் செய்வது என்ன, அதன் பின் விளைவு என்ன என்று மட்டும் கவனித்து ஒவ்வொரு செயல் பற்றியும் முடிவெடுங்கள். நீங்கள் உறுதியானவராக இருந்தால், கடவுள் உங்களை என்ன செய்யமுடியும்?

ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள். பழக்கம் என்று வந்து விட்டாலே, அதில் நல்லது என்று எதுவும் கிடையாது. பழக்கத்தின் அடிப்படையில் நிகழும் வாழ்க்கையில் ஆழமான அனுபவங்கள் கிடைக்காது. வாழ்கையின் உண்மையான ருசி தெரியாமலே போய்விடும்.

கல்லூரி விரிவுரையாளராக இருந்த பெண்மணி ஒரு புதிய கருவியை வாங்கினார். குறிப்புகளைக் கொண்டு, அதன் பாகங்களை இணைக்கப் பார்த்தார். எத்தனை முயன்றும், கருவியை முழுமையாகப் பொருத்த முடியவில்லை. வெறுத்துப் போய் அப்படியே குவியலாக அதை போட்டுவிட்டுப் போய்விட்டார். வாங்கிய கடையில் விசாரித்தார். குறிப்புகளின் எண்வரிசை தவறுதலாக அச்சாகிவிட்டதாக அவர்கள் மன்னிப்பு கேட்டார்கள். வீட்டுக்கு வந்து பார்த்தால், ஆச்சரியம் காத்திருந்தது. அக்கருவி பொருத்தப்பட்டு இயங்கிக் கொண்டு இருந்தது.

"யார் இதைப் பொருத்தியது?" என்று அவர் வியந்தார்.

"நான் தான்" என்றாள், பணிப் பெண்.

"உனக்கு எழுதப்படிக்கக்கூடத் தெரியாதே!" என்று ஆச்சரியப் பட்டார் விரிவுரையாளர்.

உண்மையில் அதுதான் உதவியிருந்தது. படிக்கத் தெரியததால், குறிப்புகளை வைத்துக் கொண்டு அல்லாடாமல், சில முயற்சிகளில் பணிப்பெண் அதை சரிவரப் பொருத்தி விட்டாள்.

பழக்கம் மூளையை ஒரே திசையில் செலுத்தும். விழிப்பு உணர்வு தான் சரியான திசையைத் தேர்ந்தெடுக்கும்.

சிலர் வாகனங்களையே கவனத்தை ஊன்றாமல் பழக்கத்தின் அடிப்படையில் செலுத்துவார்கள். அந்தச் செயலில் கிடைக்கக்கூடிய முழுமையான ஆனந்தத்தை அவர்கள் நுகர்வதில்லை. பல் தேய்ப்பதோ, குளிப்பதோ, பேனாவைத் திறப்பதோ, கையெழுத்துப் போடுவதோ எதுவானாலும், அதை உரிய கவனத்துடன் செய்து பாருங்கள். திடீரென்று ஒவ்வோர் அசைவுக்கும் புது சக்தி பிறப்பதை உணர்வீர்கள். உள்ளே இழுத்து வெளியேவிடும் ஒவ்வொரு மூச்சையும் கவனித்துச் செய்து பாருங்கள். வாழ்க்கையின் சக்தியே வீறு கொண்டுவிடும்.

போதிய கவனமின்றி வளர்த்துக் கொண்டுள்ள எந்தப் பழக்கமும் உங்களுக்கு நல்ல தல்ல. வாழ்கையை ஒவ்வொரு தருணமும் விழிப்பு உணர்வுடன் கவனியுங்கள். ஆனந்தம் பெருகும். வாழ்கை அமுதமாக முழுமை பெறும்!

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# சிறுவருக்கு மகிழ்வூட்டும் கலை

## "பாப்பா பாரதி" அனுபவங்கள் 02

தமிழ்ச்சினிமாவானது பிரம்மாண்டமான ஒரு பூதமாக கொழுத்து வளர்ந்திருக்கிற போதிலும், குழந்தைகளின் பக்கம் அது எட்டியும் பார்க்கவில்லை.

வளர்ந்தவர்களாகிய நாங்கள் திரைப் படம், தொலைக் காட்சி, விடியோ ஆகியவற்றை தேடியும் தேர்ந்தும் பார்த்து மகிழ்கிறோம். அவரவர் ரசனைக்கும் வளர்ச்சிக்கும், ஏற்ற அளவில் அனுபவம் காண்கிறோம். குழந்தைகளை வருங்காலத்தின் அரிய சொத்தாக கருதுகின்ற, குழந்தைகளுக்காக எமது சுகங்களை விட்டுக் கொடுக்கின்ற ஒரு பெருமையான மரபைக் கொண்டவர்கள் என எம்மையே நாமே நம்பிக்கொண்ட போதிலும் குழந்தைகளின் கலை நுகர்ச்சியிலும், தமிழ் நுகர்ச்சியிலும் எவ்வளவு கவனத்தைச் செலுத்தியிருக்கின்றோம் என்ற கேள்வியைக் கேட்க வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். போட்டி போட்டு, வரிசையிட்டு வெளிவந்து கொண்டிருக்கிற தமிழ் திரைப்படங்களையும் தொலைக்காட்சி நாடகங்களையும் அவற்றின் வீடியோப்பதிவுகளையும் பார்த்து மகிழ்வதில் தினமும் மணித்தியாலக்கணக்கான நேரத்தை செலவழித்து வரும் எமது சமூகம் குழந்தைகளின் சமாந்தர மகிழ்ச்சி பற்றி எவ்வளவு தூரம் கருத்தில் எடுத்துக் கொண்டது?

**எங்கள் தேவைகள்**

புலம் பெயர்ந்த நாடுகளிலுள்ள பெற்றோர் மத்தியில் தமது குழந்தைகளுக்குத் தமிழ்மொழி அறிவை ஊட்ட வேண்டமென்ற ஆவல் கொழுந்துவிட்டெரிகின்றது. குழந்தைகளுக்கும் மொழிக்கும் இடையே பிணைப்பை

> "கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

ஏற்படுத்துவது ஒரு சவாலாக உள்ளது. ஆங்கிலம் போன்ற ஒரு மொழியின் வாயிலாகத் தினமும் சுவையான வீடியோக்களையும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் பாாக்கும் குழந்தைகள் அம்மொழியை ஒரு மகிழ்வூட்டும் மொழியாகக் காண்கின்ற அதே வேளையில் தமிழை வெறுமனே எழுதியும் வாசித்தும் "பாடங்கற்கும்" ஒரு மொழியாக மட்டுமே காண்கின்றனர். இது ஒரு 'வரட்சியான' நிலையாகும். இந்த நிலை, தமிழின் மேல் அவர்களின் ஆர்வத்தை வளர்க்கச் சற்றும் உதவவில்லை.

இலங்கை, இந்தியா போன்ற தமிழரின் பாரம்பரியத் தாயகங்களில் கூட கல்வித்துறையில் "தமிழுக்கான இடம்" மாறிவருகிறது.. அல்லது அதற்கான அறிகுறிகளாவது தென்படுகின்றன. தமிழை ஒரு "மகிழ்வூட்டும்" மொழியாக எங்கள் சிறுவர் சிறுமியர் வரவேற்கும் வகையில் வளர்த்துத் தரவேண்டிய அவசர தேவைக்கு மேலதிக காரணங்கள் தோன்றத் தொடங்கிவிட்டன.

குழந்தைகளை மகிழ்விக்கத் தமிழில் போதிய வளங்கள் இல்லாத நிலையில் "புத்திசாலித்தனமாக" ஒரு குறுக்கு வழியைப் பயன்படுத்தலாமென நினைக்கும் பெற்றோர் (குறிப்பாக புலம் பெயர்ந்த நாடுகளில்) உள்ளனர். வளர்ந்தோருக்கான தமழ்த் திரைப்படங்களை அவர்கள் குந்தைகளுக்குக் காண்பிக்க முற்படுகின்றனர். இதன்மூலம் அவர்களின் தமிழறிவு விருத்தி பெறும் எனவும் நம்புகின்றனர். எங்கள் தமிழ் சினிமாவின் பொதுவான தன்மையையும் அம்சங்களையும் பெறுமானங்களையும் பற்றி இங்கே விரித்துக் கூற வேண்டிய அவசியமில்லை. தமிழ்ச் சினிமா எமது குழந்தைகளுக்கு உகந்த ஒன்றல்ல. அது குழந்தைகளின் இரசனையையும் சிந்தனையையும சிதைக்கவல்லது என்பதில் ஐயமில்லை. குளிக்கப் போய் சேறு பூசிய கதையாக இது முடியும். பழச்சாறு கிடைக்காத குழந்தைக்கு மதுபானம் கொடுத்த கதையும் ஆகலாம். குழந்தைகளின் மகிழ்வுலகத்தில் தமிழுக்கும் ஒரு 'சொட்டு' இடத்தைப் பிடித்துத் தரும் ஆவலே "பாப்பா பாரதி" யாக

**மாவை நித்தியானந்தன் -அவுஸ்திரேலியா**

மலர்ந்தது. தமிழ்க் குழந்தைகளின் முன்னால் விரிந்து கிடக்கும் இந்தப் பாரிய வெற்றிடத்தை கொஞ்சமாவது நிரப்ப வேண்டுமாயின், பெருமளவிலான உழைப்பையும் திறமையையும் பணத்தையும் எமது சமூகம் முதலீடு செய்ய வேண்டும்.

(தொடரும்)









தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் போட்டிகளில் பங்கு பற்றச் செய்யும் நோக்குடன் நாடளாவிய ரீதியில் நடைபெற்று வரும் கிரிடா சக்திய விளையாட்டுப் பயிற்சி முகாம் கடந்த 15 ஆம் திகதி கிளிநொச்சி பொதுமைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மங்கல விளக்கேற்றுவதையும் இப் பயிற்சிகளில் பங்கேற்பதற்காக விளையாட்டு வீரர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# ஜனாதிபதி மஹிந்த பாகிஸ்தான் செல்வார்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் நவம்பர் மாதம் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

பாகிஸ்தான் அரசாங்கத்தின் அழைப்பிற்கு அமைய இந்த விஜயம் இடம்பெறும் என இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தற்போது பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ளார். அமைச்சர் பீரிஸ், பாகிஸ்தான் பிரதமர் சயிட் யூசுப் ரசா கிலானியுடன் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். சீபா உடன்படிக்கையைச் சாத்திடு வது தொடர்பில் இந்தச் சந்திப்பின் போது கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந)

# பட்டாசு வெடித்ததில் தவறி வீழ்ந்து பொலிஸார் ஒருவர் படுகாயம்

மோட்டார் சைக்கிளில் பயணித்த பொலிஸார் ஒருவர் பட்டாசு வெடித்த சத்தத்தில் தவறி விழுந்து படுகாயமடைந்தார். இச் சம்பவம் ஊர்காவற்றுறையில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக நேற்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஊர்காவற்றுறைக்கு விஜயத்தை மேற்கொண்டார்.

அப்போது பிரமுகர்களின் வாகனத்திற்கு முன்பாக வீதியை விட்டு விலகுங்கள் என அறிவுறுத்தும் வகையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பொலிஸார் திடீரென வீதியில் வீசப்பட்ட பட்டாசுகள் வெடித்ததில் தவறி விழுந்து படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தவர் குருநாகலைச் சேர்ந்த ம.வீரக்கோன் (வயது-43) என தெரிவிக்கப்பட்டது.

இவர் உடனடியாக ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (ந-6)

# ஹெஜின் உடன்படிக்கை குறித்த தீர்ப்பு தொடர்பாக மேன்முறையீடு

ஹெஜின் உடன்படிக்கை குறித்து நீதிமன்றம் ஒன்று வழங்கிய தீர்ப்பு தொடர்பாக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்ப்பினை ஆட்சேபித்து சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தற்போது தயாராகி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஸ்டேன்டட் சார்ட்டெட் வங்கிக்கு சுமார் 162 மில்லியன் டொலர்களையும் அதற்கான வட்டியையும் செலுத்த வேண்டும் என லண்டனில் உள்ள நீதிமன்றம் ஒன்று அண்மையில் தீர்ப்பளித்தது.

குறித்த வங்கியும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் ஏற்கனவே கைச்சாத்திட்டிருந்த ஹெஜின் உடன்படிக்கையுடன் தொடர்புடைய வழக்கு விசாரணையின் போது நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை அறிவித்திருந்தது. (ஸ்ரீ-2)

# இரத்தினக்கல் கடத்தலுடன் தொடர்புடைய இலங்கையர்கள் இந்தியாவில் கைது

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் இரத்தினக்கல் கடத்தல் சப்வங்களுடன் தொடர்புடைய கும்பல் ஒன்றை இந்தியாவின் காஷ்மீர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நான்கு பேர் கைது செய்யப்பட்டதாகவும் இதில் மூவர் இலங்கையை சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்டவர்களிடம் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக்கற்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த கடத்தல் சம்பவங்களுடன் காஷ்மீர் கனியவள அதிகாரிகளுக்கு தொடர்பு இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

நீல மரகதக்கற்களை சர்வதேச ரீதியாக கடத்தும் நடவடிக்கைகளில் சந்தேக நபர்களுக்கு தொடர்பு இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

2011.07
18

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1656-போலந்து மற்றும் லித்துவேனியப் படைகள் வார்சாவில் சுவிடனின் படைகளுடன் போரை ஆரம்பித்தன. சுவீடிஷ் படைகள் இப்போரில் வெற்றி பெற்றன.

★ 1872-ஐக்கிய இராச்சியத்திலும் அயர்லாந்திலும் இரகசிய வாக்கெடுப்புமுறை நடைமுறைப்படுத்தப்பட்டது.

★ 1916-யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பெரும் சூறாவளியில் பலர் கொல்லப்பட்டனர். வீடுகள் மற்றும் பல தொலைத் தொடர்பு சாதனங்கள் சேதமடைந்தன.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: போரில் ஏற்பட்ட பல தோல்விகளை அடுத்து ஜப்பானியப் பிரதமர் ஹிடெக்கி டோஜோ பதவியைத் துறந்தார்.

★ 1965-சோவியத்தின் சோண்ட் 3 விண்கலம் ஏவப்பட்டது.

★ 1966-நாசாவின் ஜெமினி 10 விண்கலம் ஏவப்பட்டது.

★ 1977-வியட்நாம் ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்தது.

★ 1982-கௌதமாலாவில் பெண்கள், குழந்தைகள் உட்பட 268 மாயன் பழங்குடியினர் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1984-கலிபோர்னியாவில் மக்டொனால்ட் உணவகத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு நிகழ்வில் 21 பேர் கொல்லப்பட்டனர். 19 பேர் படுகாயமடைந்தனர். துப்பாக்கிதாரி ஜேம்ஸ் ஹியூபேர்ட்டி பொலிஸாரால் கொல்லப்பட்டான்.

★ 1995-கரிபியின் தீவான மொன்செராட்டில் சௌபியரே மலை வெடித்ததில் வெடித்துச் சிதறியதன் காரணமாக மொன்செராட்டின் தலைநகரம் அழிக்கப்பட்டதுடன் மண்டலத்தின் மக்கட்தொகையின் மூன்றில் இரண்டு பகுதியினர் தீவை விட்டு வெளியேறினர்.

★ 1997-மும்பையில் 10 சிறுவர்கள் பொலிஸாரால் கொல்லப்பட்ட நிகழ்வுக்குப் பின்னர் சுமார் 8 ஆயிரம் தலித் மக்கள் கலகத்தில் ஈடுபட்டனர்.

★ 1998-பப்புவா நியூகினியில் 23 ஆடி கடற் சூறாவளியில் 3 ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

★ 2007-மும்பையில் ஏழு மாடிக் கட்டடம் உடைந்து வீழ்ந்ததில் 29 பேர் கொல்லப்பட்டனர்.

## பிறப்புக்கள்

★ 1909-அந்திரே குரோமிக்கோ, சோவியத் ஜனாதிபதி (இ.1989)

★ 1918-நெல்சன் மண்டேலா, தென்னாபிரிக்காவின் கறுப்பினத் தலைவர், நோபல் பரிசு பெற்றவர்.

★ 1935-ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், இந்து ஆன்மீகத் தலைவர்

★ 1950-சேர் றிச்சர்ட் பிரான்சன், உலகின் பெரும் பணக்காரர்களுள் ஒருவர்

★ 1982-பிரியங்கா சோப்ரா, இந்தியத் திரைப்பட நடிகை

## இறப்புக்கள்

★ 1817-ஜேன் ஒஸ்டென், ஆங்கில நாவலாசிரியை (பி.1775)

★ 1892-தோமஸ் குக், ஆங்கிலேய பிரயாண முகவர் (பி.1808)

★ 1968-கோர்னெல் ஹேமன்ஸ், நோபல் பரிசு பெற்றவர்.

## சிறப்புநாள்

★ நெல்சன் மண்டேலா தினம் (ஐ.நா.)

# தி.மு.க.வின் அடுத்த தலைவர் தொடர்பில்

# கருணாநிதி -ஸ்டாலின் கடும் வாக்குவாதம்



(சென்னை)

தி.மு.கவின் அடுத்ததலைவர் யாரென்பதில் அக்கட்சியின் தலைவர் கருணாநிதிக்கும் ஸ்டாலினுக்கும் இடையில் காரசாரமான வாக்குவாதங்கள் இடம்பெற்றுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஊழல் விவகாரத்தில் ராசா மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி ஆகியோர் கைது செய்யப்பட்டு திஹார் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் இப்பிரச்சினையின் ஆரம்பம் முதலே இதனை சரிவர தி.மு.க கையாளவில்லை என்ற அதிருப்தி ஸ்டாலினுக்கு உள்ளதாக தெரிய வருகின்றது.

இந்நிலையில் அண்மையில் இடம்பெற்ற மத்திய அமைச்சரவை மாற்றத்தின் போது ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஊழல் விவகாரத்தில் பதவியிழந்த ராசா மற்றும் தயாநிதி மாறன் ஆகியோருக்கு பதிலாக தி.மு.க வைச் சேர்ந்த வேறு இருவரின் பெயர்களை பரிந்துரைக்குமாறு காங்கிரஸ் கட்சி தி.மு.க.வின் தலைமைப் பீடத்திடம் கேட்டிருந்தது.

ஆனால்ஸ்பெக்ட்ரம்அலைக்கற்றை ஊழல் விவகாரத்தில் காங்கிரஸ் கட்சி தங்களுக்கு உதவவில் லையே என்ற அதிருப்பதியி லிருந்த கருணாநிதிக்கு மத்திய அமைச்சரவையில் இடம் பெறு வதை தவிர்க்க விரும்பியதாக கூறப்படுகிறது. இருந்த போதும் அமைச்சரவையில் இடம் பெறுவதற்கு இருவரின் பெயர்களை ஸ்டாலின் கருணாநிதியிடம் பரிந்துரைத்ததாகவும் ஆனால் கருணாநிதி அதனை ஏற்க மறுத்து விட்டதால் ஸ்டாலின் கோபமுற்றதாகவும் ஏற்கனவே செய்திகள் வெளியாகி இருந்தன.

இந்நிலையில் தி.மு.க.வுக்குள் தற்போது ஏற்பட்டுள்ள கடுமையான நெருக்கடிகளில் இருந்து மீள கட்சியின் அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என ஸ்டாலின் கருதுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்காக சில ஆலோசனைகளையும் கருணாநிதியிடம் ஸ்டாலின் முன்வைத்துள்ளார்.

தி.மு.க.வின் தலைமைப் பதவியை தான் ஏற்கும் போது தற்போது மாவட்ட செயலாளராக உள்ள வீரபாண்டி ஆறுமுகம் உள்ளிட்டோர் தமக்கு கீழ்படிந்து நடக்கமாட்டார்கள் என்பதால் அந்தந்த மாவட்டங்களில் இவர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் கட்சியை மீட்டெடுக்க வேண்டும் என ஸ்டாலின் கருதுவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் ஸ்டாலின் இந்த ஆலோசனையை தொடர்ந்தே மாவட்ட செயலாளர்களுக்கு பதிலாக நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற தொகுதிகள் வாரியாக நிர்வாகிகளை நியமிக்கும் திட்டம் குறித்த தங்களது கருத்துக்களை தெரிவிக்குமாறும் அதனடிப்படையில் எதிர்வரும் 23 ஆம் திகதி கோவையில் நடைபெறவுள்ள தி.மு.க.வின் பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டத்தில் முடிவெடுக்கப்படும் என கடந்த மாதம் தி.மு.க.வின் தலைமைப்பீடம் அறிவித்திருந்தது.

இந்த அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து வீரபாண்டி ஆறுமுகம் போன்றவர்கள் கருணாநிதியிடம் இந்த ஆலோசனைக்கு எதிர்ப்பு தெரிவித்ததாகக் கூறப்படுவதுடன் தி.மு.கவின் இம் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இரண்டு மாவட்டச் செயலாளர்கள் பதவி விலகி உள்ளனர்.

இதனையடுத்து இந்தத் திட்டத்தை கைவிடுமாறு கருணாநிதி ஸ்டாலினுக்கு கூறியதாகவும் ஆனால் அதனை ஸ்டாலின் ஏற்கவில்லை என்றும் தெரியவருகிறது.

இந்நிலையில் ஸ்டாலினுக்கு எதிராக தி.மு .க.வின் மகளிர் அணியினர் கடந்த 14 ஆம் திகதி கருணாநிதியுடன் சிலமுறைப்பாடுகளைத் தெரிவித்ததைத் தொடர்ந்து இம்முறைப்பாடுகள் தொடர்பில் அறிவாலயத்தில் கருணாநிதியும் ஸ்டாலினும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இச்சந்தர்ப்பத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுக்குழுவின் கூட்டத்தில் தி.மு.க.வின் அடுத்த தலைவராக தன்னை அறிவிக்க வேண்டும் என கருணாநிதியிடம் ஸ்டாலின் கூறியுள்ளார். ஆனால் ஸ்டாலினை தலைவராக்க அழகிரி மற்றும் அவரின் ஆதரவாளர்கள் எதிர்ப்பு தெரிவிப்பதால் தற்போதுள்ள மந்திரியே கட்சியின் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி ஸ்டாலினுக்கு கருணாநிதி தெரிவித்துள்ளார்.


அத்துடன் மகளிர் அணியின் முறைப்பாடுகள் தொடர்பிலும் ஸ்டாலினிடம் கருணாநிதி விளக்கம் கேட்டுள்ளார். இந்த மகளிர் அணியினர் கனிமொழிக்கு ஆதரவானவர்கள் என்றும் இது குடும்ப குழப்பத்தை ஏற்படுத்துகின்ற முயற்சி என்றும் கூறிய தி.மு.க.வுக்கு தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு ஸ்பெக்ட்ரம் ஊழலும் கனிமொழியும் தான் காரணம் என கூறியதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் கனிமொழி மீது குற்றம் சுமத்துவதை கருணாநிதி ஏற்றுக் கொள்ளாததால் இருவருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றதாக கூறப்படுகிறது.

இந்த வாக்குவாதத்தை தொடர்ந்து கருணாநிதி கோபத்துடன் அறிவாலயத்தை விட்டு வெளியேறி தமது உதவியாளர் சண்முகநாதனை மட்டும் அழைத்துக் கொண்டு மகாபலிபுரத்திலுள்ள ஓய்வு விடுதி ஒன்றுக்கு சென்றதாக அறிவாலய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-4)

# பாரதச் செய்திகள்

## மூன்றாவது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் வேலைகளில் சி.பி.ஐ தீவிரம்

### ராஜா உள்ளிட்டோரிடம் இன்று விசாரணை



(புதுடில்லி)

ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடு தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் மத்திய அமைச்சர் ராஜா, தொலைத் தொடர்புத்துறை முன்னாள் செயலர் பெகுரா, ரிலையன்ஸ் நிறுவனத்தின் மேலா ண்மை இயக்குநர் கௌதம் தோஷி ஆகி யோரை மீண்டும் விசாரிக்க சி.பி.ஐ டில்லி நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

இதைத் தொடர்ந்து மூன்றாவது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதிலும் சி.பி.ஐ தீவிரம் காட்டிவருகிறது. இதற்காக திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களிடம் மீண்டு விசாரணை நடத்த அனுமதி கோரி சி.பி.ஐ சார்பில் டில்லி சிறப்பு நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு நீதிபதி ஓ.பி.சைனி முன் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. குற்றம்சாட்டப்பட்டவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எங்கள் கட்சிக்காரர்கள் ஏற்கனவே இருளில் இருக்கின்றனர். இந்த சூழ்நிலையில் அவர்களிடம் மீண்டும் விசாரணை நடத்த வேண்டிய அவசியம் என்ன? இதை சி.பி.ஐ. விளக்க வேண்டும் என்றார்.

இதையடுத்து "நீதிபதி ஓ.பி.சைனி பிறப்பித்த உத்தரவில் இந்த விவகாரம், வழக்கு தொடர்ந்த சி.பி.ஐ தரப்புக்கும் நீதிமன்றத்துக்கும் இடையேயானது. தற்போதைய சூழ்நிலையில் இதுபற்றி கேள்வி எழுப்புவதற்கு குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. எனவே குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரிக்க சி.பி.ஐ.க்கு அனு மதி அளிக்கப்படுகிறது" என்றார். இதைத் தொடர்ந்து ராஜா, பெகுரா, கௌதம் ஆகியோரிடம் இன்று திங்கட்கிழமை விசாரணை நடத்தப்பட வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு முறைகேட்டில் ஈடுபட்ட முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி உட்பட மேலும் சில பிரபலங்களின் பெயர் மூன்றாவது குற்றப்பத்திரிகையில் இடம் பெறும் என தகவல் வெளியாகியுள்ளது எனவே 3 ஆவது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு முன் அது தொடர்பான விபரங்களை சேகரிப்பதற்காகவே முன்னாள் அமைச்சர் ராஜா மற்றும் பெகுரா, கௌதம் ஆகியோரிடம் விசாரணை நடத்த சி.பி.ஐ திட்டமிட்டுள்ளது. இதனால் முறைகேட்டில் ஈடுபட்ட பிரபலங்கள் கடும் பீதி அடைந்துள்ளனர். (ஸ்ரீ-4)

## கறுப்பு பணத்தை மீட்பதற்கு மத்திய அரசு தவறிவிட்டது

### பா.ஜ.க. குற்றச்சாட்டு

(புதுடில்லி)

வெளிநாடுகளில் இந்தியர்கள் வைப்பு செய்துள்ள கறுப்பு பணத்தை மீட்டுக் கொண்டுவர மத்திய அரசு தவறி விட்டது என பாரதிய ஜனதாகட்சி தெரிவித்துள்ளது.

டில்லியில் நேற்று முன்தினம் பா.ஜ.க தகவல் தொடர்பாளர் பிரகாஷ் ஜாவேத்கர் தெரிவிக்கையில், கறுப்புப்பண விவகாரத்தை கண்காணிக்க சிறப்பு புலனாய்வு குழுவை நியமித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதை எதிர்த்து மறுசீரமைப்பு மனு தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு உரிமையுள்ளது.

அதே நேரத்தில் வெளிநாடுகளில் உள்ள வங்கிகளில் இந்தியர்கள் வைப்பு செய்துள்ள கறுப்புப் பணத்தை மீட்டுக் கொண்டு வர மத்திய அரசு தவறி விட்டது என்பதால் பொது மக்களும் நீதிமன்றங்களும் கடும் கோபம் அடைந்துள்ளன.

பதவி ஏற்ற 100 நாட்களில் கறுப்புப் பணத்தை மீட்டுக் கொண்டு வருவோம் என கடந்த 2009 இல் மத்திய அரசு தெரிவித்தது. அந்த உறுதிமொழியைக் காப்பாற்றவில்லை.

வெளிநாட்டில் குவித்து வைக்கப்பட்டுள்ள பணம் எல்லாம் சட்டவிரோத பரிமாற்றங்களின் மூலம் சேர்க்கப்பட்ட பணம். எனவே அப்படி பணத்தை குவித்தவர்களுக்கு எதிராக மத்திய அரசு முதலில் வழக்கு பதிவு செய்ய வேண்டும்.

அதன்பின் பணத்தை மீட்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கறுப்பு பண பிரச்சினை குறித்து பாராளுமன்றத்தில் மழைக்கால கூட்டத் தொடரில் விவாதிக்க வேண்டும் என வலியுறுத்துவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)



மும்பையில் குண்டு வெடிப்பில் பலியானவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் பாடசாலை மாணவ, மாணவியர் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.




# வடக்கின் வசந்தம்



## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு


மகிந்த சிந்தனையின் "வடக்கின் வசந்தம்" வேலைத்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பின்வரும் வேலைத்திட்டங்கள் 17.07.2011 அன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ச அவர்களினாலும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களினாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.






**1. துரித மீட்சித் திட்டம்:**

| இல. | பிரிவு | திட்ட விபரம் | பயனடையும் குடும்பங்கள் | மதிப்பீட்டுத் தொகை ரூ. (மில்லியனில்) |
|---|---|---|---|---|
| 1. | பருத்தித்துறை | பருத்தித்துறை நகரசபை கட்டடத்திற்கான நிர்மாணப் பணிக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. | 14.500 | 42.0 |
| 2. | மருதங்கேணி | அம்பன் கமநல சேவை நிலையம் புனரமைப்பு – திறந்துவைக்கப்பட்டது | 600 | 7.23 |
| 3. | மருதங்கேணி | மருதங்கேணி சந்தை புனரமைப்பு பணிக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. | 468 | 5.9 |







**2.குடிநீர் வழங்கல் சேவைகள்:**

ரூபா 325 மில்லியன் மதிப்பீட்டில் புலோலி அறுபது பாகம் கிணற்றடியில் பருத்தித்துறை குடிநீர் விநியோகத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 20,000 மக்கள் பயனடைவர்.



**3. வீதி அபிவிருத்தி நிர்மாணப் பணிகள்:**

- ரூபா 117 மில்லியன் செலவில் பருத்தித்துறை நகரசபைக்கு உட்பட்ட 12 வீதிகள் புனரமைக்கும் பணி நடைமுறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் 1.2 கி.மீ நீயமான விநாயகர் முதலியார் வீதியின் நிர்மாணப்பணி ஆரம்பித்து வைக்கப்பட்டது.




**4. மின் விநியோகம்:**

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் மருதங்கேணி, வல்லிபுரம் கிராமங்களுக்கான மின் விநியோக திட்டம் ஆரம்பித்து வைக்கப்படடது.

**6. சமுர்த்தி உதவித் திட்டப் பயன்கள்**


யாழ்ப்பாண மாவட்டத்தில் சமுர்த்தி திட்டத்தின்கீழ் மருதங்கேணி, பருத்தித்துறை பிரதேசங்களை சேர்ந்த சமுர்த்தி திட்ட பயனாளிகளுக்கு பின்வரும் உதவிகள் வழங்கப்பட்டன.



- மலசல கூடங்கள் அமைப்பதற்கான மூலப்பொருள் உபகரணங்கள்
- பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள்
- ரூபா 50,000ற்கு மேற்பட்ட இலகு கடன் வசதிகள்
- "திரிய பியச" வீட்டுத்திட்டத்தின்கீழ் ரூபா 100.000 பெறுமதியான சான்றிதழ்
- பாடசாலை மாணவர்களுக்கான "சிப்தெற" புலமைப் பரிசில் சான்றிதழ்கள்
- வாழ்வாதார உதவிகள்
- மனைப் பொருளாதார அபிவிருத்தி உதவிகள்

(அ-3803)

**7. மீள் எழுச்சித் திட்டப் பயன்கள்**




மருதங்கேணி.பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுகளில் விவசாய, மீன்பிடி மற்றும் கல்வித்துறைகள் தொடர்பான பல்வேறு வேலைத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

- விவசாயிகளுக்கு ரூபா 2.53 மில்லியன் பெறுமதியான 25 நீர்ப்பம்பிகளும் 50 தெளிகருவிகளும் வழங்கப்பட்டன.
- மீனவர்களுக்கு ரூபா 0.84 மில்லியன் பெறுமதியான வலைகளும், கடற்றொழிலாளர் சங்கங்களுக்கு ரூபா 0.2 மில்லியன் பெறுமதியான தளபாடங்களும் வழங்கப்பட்டன.
- பாடசாலை மாணவர்களுக்கு ரூபா 3.96 மில்லியன் பெறுமதியான 360 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

# இந்தோனேசியாவில் எரிமலை வெடிப்பு;

## ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றம்



(இந்தோனேசியா)

சுமார் 5 ஆயிரத்த 741 அடி உயரமுள்ள இந்த மலை சிகரத்தில் இருந்து கடந்த வியாழக்கிழமை இரவு சுமார் 10.46 மணிக்கு திடீரென எரிமலை வெடித்தது. தொடர்ந்து எரிமலைக் குழம்பு பொங்கி வழியத் தொடங்கியது. இதனால் அதிர்ச்சியடைந்த ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் குடியிருப்புகளை விட்டு வெளியேறத் தொடங்கினர்.

மத்திய இந்தோனேஷியாவில் எரிமலை வெடிக்கத் தொடங்கியதை அடுத்து அப்பகுதி முழுவதையும் கரும் புகையும் சாம்பல் துகள்களும் சூழ்ந்துள்ளன. இதனால் ஆயிரக்கணக்கானோர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

எரிமலைக் குழம்பு பொங்கி வருவதைப் பார்த்த பெண் ஒருவர் அதிர்ச்சியில் இறந்தார். இது தவிர அசம்பாவித சம்பவங்கள் ஏதும் நிகழவில்லை என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.


வடக்கு சுலவேசி மாகாணத்தின் தெற்கு பகுதியில் உள்ளது லோகான் மலைப்பகுதி.

மீண்டும் வெள்ளிக்கிழமை அதிகாலை இருமுறை எரிமலை வெடித்ததில் பொலிஸாரும் பாதுகாப்பு படையினரும் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். மலையடிவாரப்பகுதியில் வசித்து வந்த பொதுமக்களை பத்திரமாக மீட்கும் பணியில் அவர்கள் ஈடுபட்டனர்.

சுமார் 6 ஆயிரம் பேர் பள்ளிகளிலும் தற்காலிக முகாம்களிலும் பத்திரமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். அதேபோல் மலையடிவாரத்தின் 2 மைல் சுற்றளவுக்கு அப்பால் உள்ள சுமார் 27 ஆயிரம்பேரும் பாதுகாப்பு கருதி வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-4)

# ஒபாமா -தலாய்லாமா சந்திப்பு;

## சீன அரசாங்கம் கடும் அதிருப்தி



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மற்றும் திபெத் மதத் தலைவர் தலாய்லாமா இருவரும் நேரில் சந்திப்பதற்கு சீனா கடும் அதிருப்தி தெரிவித்துள்ளது.

சீன வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ஹாங் லீ இதுகுறித்து வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடுகையில், திபெத் சம்பந்தப்பட்ட விவகாரங்கள், சீனாவின் இறையாண்மை மற்றும் தேசிய ஒற்றுமை சார்ந்தவை. இது தொடர்பாக எந்த வெளிநாட்டு அதிகாரியும் தலாய்லாமாவுடன் சந்தித்து பேசுவதை சீனா வன்மையாகக் கண்டிக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, தலாய்லாமாவை நேரில் சந்திப்பதால் சீன-அமெரிக்க உறவில் விரிசல் ஏற்படும். இதைப்புரிந்து கொண்டு வெள்ளை மாளிகை அலுவலகம் இந்த சந்திப்பை இரத்து செய்ய வேண்டும்.

இது குறித்து பீஜிங்கில் உள்ள சீன வெளியுறவு அமைச்சகம் மற்றும் வோஷிங்டனில் உள்ள சீனத் தூதரகம் ஆகியவற்றின் மூலம் அமெரிக்க அரசுக்கு அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மற்றும் தலாய்லாமா இடையிலான சந்திப்பு வெள்ளை மாளிகையில் உள்ள ஓவல் அலுவலகத்தில் இல்லாமல் பிரத்தியேக அறை ஒன்றில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கடந்த ஆண்டில் இதேபோல் ஒபாமாவும் தலாய்லாமாவும் நேரில் சந்தித்து திபெத் குறித்து ஆலோசனை மேற்கொண்டனர். அதைத் தொடர்ந்து தாய்வானுக்கு ஆயுத விநியோகம் செய்யப் போவதாக அமெரிக்கா அறிவித்தது.

இதனால் அதிருப்தி அடைந்த சீன அரசு அமெரிக்காவுடனான இராணுவத் தொடர்புகள் அனைத்தையும் முறித்துக் கொண்டது. சமீபத்தில் தான் இந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டு இரு நாட்டின் இராணுவ உயர் அதிகாரிகளும் பல்வேறு சந்திப்புகள் மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)




# மெக்சிகோ சிறையிலிருந்து 59 கைதிகள் தப்பியோட்டம்

## ஏழுபேர் சுட்டுக்கொலை

(நியூவோ லாரெடோ)

அமெரிக்காவின் எல்லையையொட்டிய மெக்சிகோ நாட்டின் சிறையில் இருந்து தப்ப முயற்சித்த கைதிகளில் ஏழு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 59 பேர் தப்பிச் சென்றனர்.

மெக்சிகோவின் வடக்கில் நியூவோ லாரெடோவில் உள்ள சிறையில் போதைப் பொருள் மற்றும் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்ட கைதிகள் உட்பட மொத்தம் ஆயிரத்து 200 கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். அடிக்கடி கைதிகள் தப்பிச் செல்லும் இச்சிறையில் இருந்து அண்மையில் தப்ப முயற்சித்த கைதிகளில் ஏழு பேர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இருந்தும் 59 பேர் தப்பிச் சென்றனர்.

அமெரிக்காவின் எல்லையையொட்டி இப்பகுதி அமைந்து இருப்பதால் மெக்சிகோ நாட்டில் இருந்து போதைப் பொருட்கள் அமெரிக்காவிற்குள் கடத்திச் செல்லப்படுகிறது.

இவ்வாறு கடத்திச் செல்லும் போது பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் பொலிஸாருக்கும் கொள்ளையர்களுக்கும் இடையே அடிக்கடி சண்டை நடக்கும். சிறையில் இருந்து அடிக்கடி கைதிகள் தப்பிச் செல்வது வழக்கமாகவுள்ளது. இதுவரை இச்சிறையில் இருந்து 400 கைதிகள் தப்பிச் சென்றதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-4)

# ஒபாமாவுடன் விருந்து சாப்பிடுவதற்கு 16 இலட்சம் ரூபா கட்டணம் நிர்ணயம்



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் 50 ஆவது பிறந்தநாள் வருகின்ற ஓகஸ்ட் 4 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. இந்த விழாவை தனது சொந்த ஊரான சிகாகோ நகரில் அவர் கொண்டாடுகிறார்.

இந்த விழாவில் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்கின்றனர். அதில் பங்கேற்க அவர் கட்டணத்தை நிர்மாணம் செய்துள்ளார்.

பிறந்தநாள் விழா மற்றும் விருந்து நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் ஒரு தம்பதி ரூபா 16 இலட்சம் செலுத்த வேண்டும். அப்போது தான் அவர் ஒபாமாவுடன் விழாவில் பங்கேற்க முடியும். விருந்தினர்கள் செலுத்தும் பணத்தில் ரூபா 2 ஆயிரத்து 500 நுழைவு கட்டணமாகவும் ரூபா 4 ஆயிரத்து 500 மது மற்றும் விருந்து நிகழ்ச்சிக்கும் ரூபா 45 ஆயிரம் ஒபாமாவுடன் சேர்ந்து போட்டோ எடுத்து கொள்வதற்கு என்றும் மற்றும் அதுபோன்று பல நிகழ்ச்சிகளுக்கு என தனித்தனியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவல் அமெரிக்காவில் இருந்து வெளிவரும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் டிசம்பரில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ளது. அதில் ஒபாமா மீண்டும் போட்டியிட உள்ளார்.

அதற்கு தேவைப்படும் பணத்தை ரூபா 400 கோடி நிதியை இதன் மூலம் பெருக்க திட்டமிட்டுள்ளார். அதற்காக தான் இந்த நிதி வசூல் செய்யப்படுகிறது என்றார். (ஸ்ரீ-2)

# பயங்கரவாதிகள் பட்டியலிருந்த 14 தலிபான்களின் பெயர் நீக்கம்

(அமெரிக்கா)

ஆப்கான் அரசு மற்றும் அந்நாட்டு அமைச்சரவை விடுத்த வேண்டுகோளை ஏற்று தலிபான் பயங்கரவாதிகள் பட்டியலில் இருந்து 14 பேரின் பெயரை ஐ.நா. நீக்கம் செய்தது. ஆப்கானில் அமைதி ஏற்படுத்தும் விதமாக தலிபான் பயங்கரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களை தேசிய நீரோட்டத்திற்குள் கொண்டு வர அமைதி சபை ஒன்றை ஆப்கான் ஜனாதிபதி ஹமித் கர்சாய் நியமித்தார்.

இக்கவுன்சில் தலிபான் பயங்கரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இதுவரை ஆயிரத்து 500 க்கும் மேற்பட்டோரை தேசிய நீரோட்டத்திற்கு கொண்டு வந்துள்ளது.

இந்நிலையில் ஐ.நா.வின் தலிபான் பயங்கரவாதிகள் பட்டியலில் இருந்து 14 பேரை நீக்கம் செய்ய ஆப்கான் அரசும் அமைதி சபையும் ஐ.நா.வை கேட்டுக் கொண்டன. இதற்கமைய 14 பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. இவர்களில் நான்கு பேர் ஜனாதிபதி கர்சாயின் அமைச்சரவை உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் தவிர இன்னும் ஐ.நா. பட்டியலில் 123 தலிபான் பயங்கரவாதிகள் பெயர் இடம்பெற்றுள்ளது. (ஸ்ரீ-4)

# இலியாஸ் காஷ்மீரி உயிருடன் உள்ளார்

## பாகிஸ்தான் ஊடகம் தகவல்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் அமெரிக்க ஏவுகணை தாக்குதலில் இறந்து விட்டதாக நம்பப்பட்ட அல்-கொய்தா கொமாண்டர் முகம்மது இலியாஸ் காஷ்மீரி உயிருடன் இருப்பதாக மான் பத்திரிகையின் இணையத்தளத்தில் செய்தி வெளியாகியுள்ளது. பாகிஸ்தானின் தெற்கு வசிரிஸ்தான் பகுதியில் சமீபத்தில் அமெரிக்கா நடத்திய ஏவுகணை தாக்குதலில் அல்கொய்தா கொமாண்டரும் அமெரிக்காவால், தேடப்பட்டு வரும் பயங்கரவாதிகளில் ஒருவருமான இலியாஸ் காஷ்மீரி கொல்லப்பட்டதாக செய்திகள் வெளியாயின. ஆனால் இச்செய்தியை அமெரிக்காவோ பாகிஸ்தானோ இதுவரை உறுதி செய்யவில்லை. இந்நிலையில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் எல்லைப்பகுதியில் காஷ்மீரி உத்வேகத்துடன் செயற்பட்டு வருவதாக அப்பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது. யார் இத்தகவலை கூறினார் என்பது அச்செய்தியில் கூறப்படவில்லை. (ஸ்ரீ-4)



மியன்மாரில் புத்த மதத்தை சேர்ந்தவர்கள் பௌர்ணமி தினத்தை யொட்டி ஸ்வேடகனில் உள்ள புத்த கோயிலில் கூடியிருந்தனர்.

யாருக்கும் உதவி செய்யாதவர்கள் பிறர் உதவியை எதிர்பார்க்க முடியாது.

—ஈசாப்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வவுனியா சிறைச்சாலையில் தொடரும் உண்ணாவிரதப் போராட்டம்

## கைதியொருவரின் உடல்நிலை பாதிப்பு

(கொழும்பு)

வவுனியா சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வரும் தமிழ் அரசியல் கைதிகளில் ஒருவரின் உடல் நிலை மோசமடைந்த நிலையில் வவுனியா போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியா சிறைச்சாலையிலுள்ள நான்கு தமிழ் அரசியல் கைதிகள் கடந்த ஏழு நாட்களாக நீராகாரமோ அல்லது உணவாகாரமோ எதுவுமின்றி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் ஒருவரின் உடல்நிலை மிக மோசமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கட்டையன் லோகேஸ்வரன் (வயது 40) என்பவரின் உடல்நிலை மோசமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த நான்கு தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து வவுனியா சிறைச்சாலையிலுள்ள ஏனைய தமிழ் அரசியல் கைதிகளும் நேற்று முன்தினம் முதல் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வரும் மேற்படி கைதிகளை நேற்று வந்து பார்வையிட்ட புனரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் தசநாயக்க உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கைதிகளைக் கேட்டுக் கொண்டார்.

இருப்பினும் தங்களுக்கு முடிபு கிடைக்கும் வரை தமது உண்ணாவிரதம் தொடருமென கைதிகள் கூறியதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குறிப்பிட்டார்.

இதேவேளை மேற்படி கைதிகளின் உண்ணாவிரதம் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தொலைநகல் மூலம் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் வவுனியா சிறைச்சாலையில் கடந்த ஒருவார காலமாக நான்கு தமிழ் அரசியல் கைதிகள் தங்களை விடுதலை செய்ய வேண்டும் அல்லது சட்டத்தின் முன் நிறுத்த வேண்டுமெனக் கோரி சாகும் வரையிலான உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

❖ அத்துடன் சரணடைந்து புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டவர்களை மீண்டும் கைது செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

❖ உண்ணாவிரதிகளின் உடல் நிலையை அவதானித்து வரும் மருத்துவர்கள் கட்டையன் லோகேஸ்வரன் என்பவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாகவும் அவர் கிட்டத்தட்ட சுயநினைவிழக்கும் நிலையை அடைந்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

❖ நான்கு அரசியல் கைதிகளும் தங்களது கோரிக்கை நிறைவேறும் வரை உண்ணாவிரதம் இருக்கும் இடத்திலிருந்து தங்களை அப்புறப் படுத்தக் கூடாது என்று எழுத்து மூலம் தெரிவித்துள்ளனர்.

❖ கடந்த சனிக்கிழமை முதல் நான்கு உண்ணாவிரதிகளுக்கு ஆதரவாக மேலும் உள்ள 42 தமிழ் அரசியல் கைதிகளும் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

❖ எனவே தாங்கள் தங்களது பிரதிநிதியை உடனடியாக அனுப்பி அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குத் துரித நடவடிக்கை எடுக்குமாறு உண்ணாவிரதிகளின் மீது கொண்டுள்ள அக்கறையினாலும் மக்களின் நலன்சார்ந்தும் தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

❖ உங்களது சரியான மற்றும் துரிதமான நடவடிக்கையானது ஏனைய இடங்களில் முறையான சட்ட நடவடிக்கைகளின்றி நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகளிடையே ஏற்படக்கூடிய பதற்றத்தைத் தணிக்க உதவும் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோமென்று குறிப்பிடப்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன் , வினோநோதராதலிங்கம் ஆகியோர் கையொப்பமிட்டு ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளனர். (ஸ்ரீ-2)

# வேட்பாளர்களைச் சமாளிக்கும் திறன் பெற்ற தமிழ் வாக்காளர்கள்

உள்ளூராட்சித் தேர்தல் வடபுலத்தில் களை கட்டியுள்ளது. உள்ளூராட்சி சபைகளை எப்படியும் கைப்பற்றி விட வேண்டும் என்பதில் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன.

அதற்காக தேர்தல் பிரசார முன்னெடுப்புகள் இராப்பகலாக நடந்த வண்ணம் உள்ளன.

சுவரொட்டிகள், பதாகைகள் ,துண்டுப்பிரசுரங்கள் என்பனவற்றை விட, வேட்பாளர்கள் வீடு வீடாகச் சென்று, உங்கள் பொன்னான வாக்கை எங்களுக்கே தாருங்கள் என்று கேட்கின்றனர். அதற்காக கூப்பிய கரத்துடன் வேட்பாளர்கள் வருவதைப் பார்க்கும்போது, நெஞ்சம் நெகிழவே செய்கிறது.

ஓ! தேர்தல் அடிக்கடி வந்தால் எவ்வளவு நல்லது. இப்படியும் எண்ணத் தோன்றுகின்றது.

வேட்பாளர்களின் கும்பிடுகைக்காக அடிக்கடி தேர்தல் வேண்டுமென்று சொல்லவில்லை. மாறாக , வேட்பாளர்களின் மலர்ந்த வதனம், சிரிப்பழகு, அப்பளுக்கற்ற தலை அசைப்பு, எங்கள் பெயரை உச்சரிக்கும் போது, அவர்கள் காட்டும் உரிமை, உறவு, பாசம் இவற்றைப் பார்க்கும் போது, தேர்தல் அடிக்கடி வரவேண்டும். அதற்காக தேர்தலில் அடிதடி வரக்கூடாது.

இந்த சிந்தனை சிரிப்புக்குரியதாக இருந்தாலும் கொடும் போரில் வாழ்வைச் சமாளித்த வடபுலத்து மக்களுக்கு வேட்பாளர்களைச் சமாளிப்பதில் பெரும் சிக்கல் இருக்கமுடியாது.

எந்த வேட்பாளர் வந்தாலும் அந்த வேட்பாளர்களின் நடிப்பை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு ஏற்றவாறு தாளம்போடும் கெட்டித்தனம் எங்கள் வாக்காளர்களுக்கு உண்டு.

யார் வந்தாலும் உங்களுக்குத்தான் எங்கள் வாக்கு என்று சொல்லி விடுவர். வெளியில் இப்படிச் சொன்னாலும்,உள்மனத்துள் ஒரு முடிபு திடமாக இருக்கவே செய்யும். அதனை அறிவது யாராலும் முடியாத காரியம்.

எதுவாயினும் நடைபெறப்போகும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் பொதுமக்கள்-தமிழ்மக்கள் எதுவித அக்கறையும் அற்றவர்களாக இருப்பதைக் காணமுடிகின்றது.

வாழ்க்கையே வெறுத்துப்போன பின்பு தேர்தல், வாக்களிப்பு, இது பற்றியெல்லாம் சிந்திக்கும் மனநிலை இருக்குமென எதிர்பார்க்க முடியாது என்பது உண்மையே.

என்ன செய்வது ! தேர்தல் என்பது வந்து விட்டால் கூடவே வாக்களிக்கும் உரிமையும் வந்துவிடுகின்றது.

எனவே மக்கள் வாக்களிக்கும் உரிமையை உடையவர்கள். வாக்களிக்கும் உரிமை எனும் போது வாக்களிக்காமல் விடுகின்ற உரிமையும் உண்டென்பதில் இரு வேறு கருத்துக்கு இடமில்லை. ஆனால் நாம் வாக்களிக்கவில்லை என்பதற்காக தேர்தல் முடிபு வெளிவராது என்று எவரும் நினைக்க முடியாதல்லவா?

ஆகையால், ஒவ்வொருவரும் வாக்களிப்பது நல்லது. யாருக்கு வாக்களிப்பது என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

# 2ஜி வழக்கு விசாரணையை சி.பி.ஐ. இழுத்தடிக்கிறது

## ராசா, கனிமொழி புகார்



(புதுடில்லி)

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு திகார் சிறையில் இருக்கும் விசாரணைக் கைதிகள் அனைவரும் வழக்கை வேண்டுமென்றே சி.பி.ஐ. இழுத்தடிப்பதாக குற்றம் சாட்டியுள்ளனர்.

தங்களுக்கு பிணை கிடைக்கக் கூடாது என்பதற்காக வழக்கு விசாரணையைத் தேவையில்லாமல் சி.பி.ஐ. இழுத்தடிப்பதாக தங்களின் வழக்கறிஞர்கள் மூலம் நீதிபதியிடம் முறையிட்டுள்ளனர்.

பட்டியாலா நீதிமன்ற வளாகத்தில் உள்ள சிறப்பு சி.பி.ஐ. நீதிமன்ற நீதிபதி ஓ.பி.ஸ்சனி முன்பு ஆஜரான ஷாஹித் பல்வாவின் வழக்கறிஞர் விஜய் அகர்வால் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குத் தேவையான ஆவணங்களை சி.பி.ஐ . தராமல் மறைப்பதாகவும் வேண்டுமென்றே வழக்கு விசாரணையை இழுத்தடிப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

இதே கருத்தை கனிமொழி மற்றும் ராசாவின் வழக்கறிஞர்கள் நீதிபதியிடம் தெரிவித்தனர்.

வழக்கறிஞர்களின்வாதங்களை கேட்ட நீதிபதி இது குறித்து விளக்கம் அளிக்குமாறு சி.பி.ஐ.க்கு உத்தரவிட்டார். குற்றம் சாட்டப்பட்டு திகார் சிறையில் இருக்கும் அனைவரின் பிணை மனுக்களும் பலமுறை நிராகரிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் பலர் மருத்துவக் காரணங்களுக்காகவும் பிணை மனு செய்தனர். சி.பி.ஐ. அடுத்த சில வாரங் களில் 3 ஆவது குற்றப்பத்திரிகையை தாக் கல் செய்யும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஸ்ரீ-4)

# சிறப்பு சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக் கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 10.30 மணியளவில் **தேவிபாகவதம்** தொடரில் யாழ்ப் பாணக்கல்லூரி விரிவுரையாளர். அ. குமார வேல் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-35)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## கஷ்டங்களை வெல்வது எப்படி?



மேலைநாட்டு விஞ்ஞானத்தோடு இணைந்த வேதாந்தமும் பிரம்மச்சரியமும் வாழ்க்கையின் அடிப்படை இலட்சியங்களாக நமக்கு தேவைப்படுகின்றன. ஆசிரியரின் வாழ்க்கை முன்மாதிரியாக அமையாமல் மாணவனால் எந்தவிதக் கல்வியையும் பெறமுடியாது. உன்னுடைய குறிக்கோளை அடைய முயற்சிக்க வேண்டும். தோல்வி கண்டு துவழக்கூடாது. தோல்வியின் மூலமே நாம் புத்திசாலிகளாகிறோம். உனக்குள் இருக்கும் ஆற்றல் புறத்தில் வெளிப்படும் வகையில் நீ வளர வேண்டும். வேறு எவரும் கற்பிக்கவும் முடியாது. உன்னை ஆன்மீகவாதி ஆக்கிவிடவும் முடியாது. உனது சொந்த ஆன்மாவைத் தவிர வேறு ஆசிரியர் யாருமில்லை. இடையறாத பயிற்சியின் மூலம் கஷ்டங்களை நாம் வெல்ல முடியும். எளிதில் பாதிக்கப்படும் வகையில் நம்மை நாமே விட்டுவைத்தாலன்றி நமக்கு எதுவும் நேர்ந்து விட முடியாது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். தொடர்ந்து புனிதமான எண்ணங்களையே சிந்தித்தபடி நன்மையை செய்து கொண்டிருந்தால் தீய செயல்கள் தலை காட்ட வழி ஏற்படாது.

# கிழக்கில் இனவிகிதாசார அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்கு எதிர்ப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு இன விகிதாசார அடிப்படையில் ஆட்களை திரட்டுவதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்திற்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

குறித்த சேவைக்கு ஆட்களைத் திரட்டு வது தொடர்பாக மாகாண பொதுச் சேவை கள் ஆணைக்குழுவினால் போட்டி பரீட்சை யொன்றை நடத்துவதற்கான அறிவித்தல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்றவர்கள் அரச நிர்வாக சுற்றிக்கை(15/90) யின்படி இன விகிதாசார அடிப்படையிலேயே இந்த சேவைக்கு தெரிவு செய்யப்படுவார்கள் என மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரின் அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அந்த அரச நிர்வாக சுற்றிக்கை ஏற்கனவே நீதிமன்ற உத்தரவின் பேரில் பல வருடங்களுக்கு முன்னர் இரத்து செய்யப் பட்டுள்ளதாகக் கூறும் நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா அதன் பின்னர் தான் அறிந்தவரை இன விகிதாசார அடிப் படையில் நியமனங்கள் எதுவும் வழங்கப் படவில்லை என்றும் கூறுகிறார்.

சில வாரங்களுக்கு முன்பு மத்திய அரசினால் இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட் திரட்டல் நடைபெற்றபோதும் திறமை அடிப்படையிலேயே சுமார் 250 பேர் தெரிவானார்கள். இதில் தமிழ் பேசும் எவரும் தெரிவாக வில்லை. இன விகிதாசார அடிப்படை பேணப் பட்டிருந்தால் 40 தொடக்கம் 50 பேர்வரை அதில் தமிழ் பேசும் இனத்தவர்கள் தெரிவாக வாய்ப்பு கிடைத்திருக்கும் என்றும் சுட்டிக் காட் டினார்.

மாகாண பொதுச் சேவை ஆணைக் குழு செயலாளருக்கு தான் அனுப்பிவைத்துள்ள ஆட்சேபனைக் கடிதத்தில் திறமை அடிப் படையில் ஆட்தெரிவு இடம்பெற வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளதாகவும் அவர் கூறுகிறார். தனது கடிதத்திற்கு பதில் கிடைக் காவிட்டால் அல்லது சாதகமான முடிவு கிடைக் காவிட்டால் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் குறிப் பிடுகிறார். (ஸ்ரீ-4)

## தொழில்நுட்ப கல்லூரி இறுதிப்பரீட்சை

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரி இறுதிப்பரீட்சை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான விண்ணப்பம் தொழில்நுட்பக் கல்வி பயிற்சித்திணைக் களத்தினால் கோரப்பட்டுள்ளது. எனவே இறுதிப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும் மீள் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களும் தங்கள் விண்ணப்பத்தினை கல்லூரியின் பரீட்சைப் பகுதியில் பெற்று எதிர் வரும் 20 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு தொழில்நுட்பவியல் கல்லூரி பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையில் இலஞ்ச ஊழல் மோசடிகள் அதிகரிப்பு

## பிரித்தானியா சுட்டிக்காட்டு

இலங்கையில் அதிகளவு இலஞ்ச ஊழல் மோசடிகள் இடம்பெறுவதாக பிரித்தானியா சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் முதலீடு செய்துள்ள மற்றும் செய்ய உத்தேசித்துள்ள பிரித்தானிய வர்த்தக நிறுவனங்கள் இலஞ்ச ஊழல் மோசடிகள் தொடர்பில் விழிப்புடன் செயற்பட வேண்டியது அவசியமானது என வலியுறுத்தப்பட்டுள்ளது.

வர்த்தக மற்றும் முதலீடு தொடர்பான பிரித்தானியாவின் 'உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க நிறுவனங்கள், பொலிஸ் வருமான வரி இலாகா சுங்கத் திணைக்களம் உள்ளிட்ட சகல துறைகளிலும் இலஞ்ச ஊழல் மோசடி இடம்பெற்று வருவதாக சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இலங்கையின் அநேகமான பொதுத் துறை நிறுவனங்களின் உயர்பதவிகள் அரசியல்ரீதியான நியமனங்களை கொண்டமைந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இவ் வாறான நிறுவனங்களில் அதிகளவு ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை நாட்டின் நன்ம திப்பிற்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறான பிரசாரங்கள் மேற்கொள்ளப் பட்டு வருவதாக பொருளாதார அபிவிருத்தி தொடர்பான பிரதி அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கடந்த ஆறுமாத காலப்பகுதியில் 590 மில்லியன் அமெரிக்கடொலர் வெளிநாட்டு முதலீடு இலங்கைக்கு நேரடியாக கிடைக்கப் பெற்றுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# பயங்கரவாதத்தை இல்லாதொழித்த ஒரே ஜனநாயக நாடு இலங்கையே

## அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் தெரிவிப்பு

அண்மையில் பயங்கரவாதத்தை இல்லா தொழித்த ஒரே ஜனநாயக நாடாக இலங்கை திகழ்கின்றது என அமெரிக்க காங்கிரஸ் உறுப் பினர் ஹீத் சூலர் தெரிவித்துள்ளார் என சிங் கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் வட கரோலினா மாநிலத்தின் காங்கிரஸ் சபை உறுப்பினராக சூலர் கடமையாற்றுகின்றார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் பிழையான கருத்துக்கள் நிலவி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு தாம் விஜயம் செய்துள்ளதாகவும் இலங்கையின் நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த 30 இலட்சம் மக்களின் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் மீள் குடியேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட 11 ஆயிரம் விடுதலைப்புலி உறுப்பினர்களில் பலர் புனர் வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக் கப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையில் நீண்டகாலமாக கடற்படை மற்றும் புலனாய்வுத் தகவல்கள் தொடர்பான உறவுகள் காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். இந்த உறவுகளை உதாசீனம் செய்யக்கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார் என அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை கலட்டி இச்சாட்டி மகா மாரியம்பாள் தேவஸ்தான பிரமோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதில் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திரு விழாவும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ)

# தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 85 பேர் கைதாகினர்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தை மீறிய 85 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் சட்டம் மீறப்பட்டமை தொடர்பில் நேற்று முன்தினம் வரை 63 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததாக தேர்தல் பாதுகாப்பு கடமைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்ன கூறியுள்ளார்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டிருந்த 18 வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றியதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர் தலுடன் தொடர்புடைய பிரசார சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் அகற்றும் பணிகள் உரிய முறையில் செயற்படுத்த சில பொலிஸ் அதிகாரிகள் தவறியுள்ளதாக தேசிய தேர்தல் கண்காணிப்பு மத்திய நிலையம் தெரிவித் துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடை பெற வுள்ள நிலையில் தேர்தல் வன்முறைகள் அதிகரித்து செல்வதாகவும் மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

வட மாகாணத்தில் எதிர்க்கட்சிகளை சேர்ந் தவர்கள் சுதந்திரமான முறையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலை உள்ளதாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் பிரசார நடவடிக்கை ஆரம்பமானது தொடக்கம் இதுவரை அந்த நிலைமை காணப்படுவதாக அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக் கோன் தெரிவித்தார். (ஸ்ரீ-2)




தென்மராட்சி வலயமட்டத்தில் நடைபெற்ற தமிழ்த்தின வில்லுப் பாட்டுப் போட்டியில் முதலாமிடம் பெற்ற கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலய தரம் 1 மாணவர்களை படத்தில் காணலாம்.


## கண்ணீர் அஞ்சலி



### வைத்திலிங்கம் இலட்சுமணன்

தோற்றம் 1939.07.28 மறைவு 2011.07.17

அவர்கள் 17.07.2011 இல் காலமாகியதையிட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வ.அப்புத்துரை, ஆலய பூசகர்,
மல்லாகம் பெரிய தம்பிரான்
தேவஸ்தானம்

(5397)

# கோபா அமெரிக்க கால்பந்து ஆர்ஜென்டினா வெளியேற்றம்

## பெனால்டியால் உருகுவே வெற்றி




தென் அமெரிக்கக் கண்டத்தில் உள்ள நாடுகள் பங்கேற்கும் கோபா அமெரிக்க கோப்பை கால்பந்து போட்டி ஆர்ஜென்டினாவில் நடைபெற்று வருகிறது. இதன் காலிறுதி போட்டிகள் நேற்று தொடங்கியது.

ஒரு ஆட்டத்தில் ஆர்ஜென்டினா-உருகுவே அணிகள் மோதின. ஆட்டத்தின் 5 ஆவதுநிமிடத்திலேயே உருகுவே கோல் அடித்து ஆர்ஜென்டினாவுக்கு அதிர்ச்சி கொடுத்தது. 12 ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்டினா பதில் கோல் அடித்து சமன் செய்தது. தோன்சாலோ இந்த கோலை அடித்தார். அவர் இந்த கோலை அடிக்க மெஸ்சி காரணமாகத் திகழ்ந்தார்.

ஆர்ஜென்டினா மேலும் கோல் அடிக்க கடுமையாக போராடியது. அதேபோல் உருகவே வீரர்களும் போராடினார்கள். ஆட்டத்தின் முடிபில் 1-1 என்ற சமநிலை இருந்தது. இதனால் கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. கூடுதலான ஒரு நிமிட நேரத்திலும் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை. 1-1 என்ற சமநிலையிலே இருந்தது. இதனால் வெற்றி-தோல்வியை நிர்ணயிக்க பெனால்டி ஷூட் கடைப்பிடிக்கப்பட்டது.

இதில் ஆர்ஜென்டினா அதிர்ச்சிகரமாக தோற்று போட்டியில் இருந்து வெளியேறியது. பெனால்டி ஷூட்டில் உருகுவே 5-4 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்டினாவை வீழ்த்தியது.

இந்த வெற்றி மூலம் உருகுவே அரை இறுதிக்கு தகுதி பெற்றது.

கடந்த ஆண்டு நடந்த உலக கோப்பையில் அந்த அணி அரை இறுதி வரை நுழைந்து இருந்தது.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் பெரு 2-0 என்ற கோல் கணக்கில் கொலம்பியாவை அதிர்ச்சிகரமாக தோற்கடித்து அரை இறுதிக்கு தகுதி பெற்றது. இன்று நடைபெறும் காலிறுதி ஆட்டங்களில் நடப்பு சாம்பியன் பிரேசில்-பராகுவே, சிலி-வெனிசுலா அணிகள் மோதுகின்றன.

# சம்பியன் யாரோ?



மகளிர் உலகக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டியில் அமெரிக்கா, ஜப்பான் ஆகிய அணிகள் மேதுகின்றன.

ஜேர்மனியில் நடைபெறும் இத்தொடரின் அரையிறுதிப் போட்டியொன்றில் பிரெஞ்சு அணியை அமெரிக்க அணி 3-1 என்ற கோல்கள் விகிதத்தில் வெற்றிகொண்டது.

மற்றொரு அயைிறுதிப் போட்டியில் சுவீடன் அணியை ஜப்பானிய அணி 3-1 என்ற விகிதத்தில் வெற்றிகொண்டது.

இத் தொடரின் இறுதிப்போட்டி பிராங்பர்ட் நகரில் நடைபெறவுள்ளது. இதுவரை நடைபெற்ற 5 உலகக் கிண்ண சுற்றுப்போட்டிகளில் அமெரிக்கா, ஜேர்மனி ஆகிய அணிகள் இரு தடவையும் நோர்வே ஒரு தடவையும் சம்பியனாகியுள்ளது.

ஜப்பானிய அணி இம்முறை முதல் தடவையாக இறுதிப்போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

இறுதியாக நடைபெற்ற இரு சுற்றுப்போட்டிகளிலும் சம்பியணாகிய ஜேர்மனிய அணியை இம்முறை காலிறுதிப் போட்டியில் ஜப்பான் 1-0 விகிதத்தில் தோற்கடித்தமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரொரஸ் பயந்திட்டாரா?

இங்கிலாந்து டெஸ்ட் அணித் தலைவர் அண்ட்ரு ஸ்ரொரஸ். இவருக்கு இடது கை வேகப்பந்து வீச்சு என்றால் அலர்ஜி. குறிப்பாக இந்திய அணி வேகப்பந்து வீச்சாளர் சகீரை எதிர்கொள்வது என்றாலே ஸ்ரொரஷுக்கு உதற ஆரம்பித்துவிடும். டெஸ்ட் போட்டிகளில் அவர் ஏற்கனவே 5 முறை சகீர் கான் வேகத்தில் ஆட்டமிழந்துள்ளார். இப்போது இந்தியாவுடன் 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் மோத உள்ளதால் 3 நாள் பயிற்சி ஆட்டத்தில் சமர்செட் அணிக்காக விளையாட வேண்டும் என அடம்பிடித்து வாய்ப்பு வாங்கினார். இங்கிலாந்து கவுண்டி கிளப் போட்டிகளில் அவர் மிடில்செக்ஸ் அணிக்காக விளையாடி வருவது குறிப்பிடத்தக்கது. பயிற்சி ஆட்டத்தில் ஸ்ரொரஸ் வலிய வந்து விளையாடியது பற்றி சகீர் கான் நேற்றுமுன்தினம் கூறியதாவது,

இடது கை வேகப்பந்து வீச்சை சமாளிப் பதில் ஸ்ரொரஸுக்கு இன்னும் சிக்கல் உள்ளது. அவர் மீதே நம்பிக்கை இல்லாததால் தான் பயிற்சி ஆட்டத்தில் விளையாட முன் வந்துள்ளார். இதில் இருந்தே அவர் பயந்துவிட்டார் என்பது தெளிவாகின்றது. அவரது சந்தேகம் எனக்கு சாதகமாக இருக்கும். இந்த தொடரின் தொடக்கத்திலேயே அவரது விக்கெட்டை வீழ்த்தி நெருக்கடி கொடுப்பேன் என்று சகீர் கான் கூறியுள்ளார்.



சகீர் கான்

# ஸ்ரொரஸை விட தோனி திறமையானவர் முன்னாள் அணித்தலைவர் வோகன் புகழாரம்

(லண்டன்)

இந்திய கிரிக்கெட் அணி 4 டெஸ்ட், ஒரு இருபது -20 போட்டி மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்காக இங்கிலாந்து சென்றுள்ளது. இரு அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி வருகின்ற 21-ந் தேதி லண்டன் லோட்ஸ் மைதானத்தில் தொடங்குகின்றது.

இந்த போட்டிக்கு முன்னதாக இந்திய அணி பயிற்சி ஆட்டத்தில் விளையாடி வருகின்றது. இந்த டெஸ்ட் தொடர் குறித்து இங்கிலாந்து முன்னாள் அணித்தலைவர் மைக்கல் வோகன் கூறியதாவது,

குறிக்கோளை அடைவதில் இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்ரொரஸை விட இந்திய அணித்தலைவர் தோனி சிறந்தவர் ஆவார். இந்திய அணியில் சிறந்த வீரர்கள் இருப்பதால் மட்டும் தோனி சிறப்பாக செயல்பட வில்லை. அணித்தலைவர் பதவிக்குரிய திறமை அதிகமாக இருப்பதால் அவர் மிகவும் சிறந்து விளங்குகின்றார். களத்தில் வியூகம் அமைத்து அணியை வழி நடத்தி செல்வதில் அவர் சிறந்தவராக இருக்கிறார். எதிர் அணிகளுக்கு எதிராக அவர் கடுமையாக போராடும் குணம் கொண்டவர். ஸ்ரொரஸ் அப்படியில்லை.




அவர் பாதுகாப்பான ஆட்டத்திற்கு அதிக முன்னுரிமை கொடுப்பவர். இதனால் இந்த தொடர் சவால் நிறைந்ததாக இருக்கும். இந்த தொடரை பொறுத்தவரை அணித்தலைவரின் சிறந்த திட்டமே ஒரு அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காக இருக்கும். இவ்வாறு இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித்தலைவர் மைக்கல் வோகன் கூறியுள்ளார்.

# இங்கிலாந்தை இந்தியா வீழ்த்தும் - கபில்தேவ்


(லக்னோ)

இந்திய அணி, இங்கிலாந்தையும் வீழ்த்தும் என்று உலகக் கோப்பை நாயகன் கபில் தேவ் தெரிவித்தார்.

இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் எதிர்வரும் 21-ம் திகதி தொடங்குகிறது.

இந்த நிலையில் லக்னோவில் நிகழ்ச்சியொன்றில் பங்கேற்க வந்த கபில்தேவ் மேலும் கூறியது, சமீபத்தில் முடிபடைந்த மேற்கிந்தியத் தீவுகள் தொடரை வென்ற இந்திய அணியால், ஏன் இங்கிலாந்தை வீழ்த்த முடியாது?

இந்தியா நிச்சயம் இங்கிலாந்து அணியை வீழ்த்தி தொடரைக் கைப்பற்றும். இந்திய வீரர்கள் இப்போது ஓய்வின்றி விளையாடி வருகின்றனர். அவர்கள் ஒவ்வொரு விடயத்திலும் முழு கவனத்தை செலுத்த வேண்டும்



விளையாட்டுடன் தொர்புடையவர்கள் விளையாட்டு அமைப்பின் நிர்வாகிகளாக வந்தால், அது விளையாட்டை சரியான வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லவதற்கு உதவும் என்று கூறிய கபில்தேவ், அரசியல்வாதிகள் விளையாட்டு அமைப்பின் நிர்வாகிகளாக வரக்கூடாது என்று தான் ஒருபோதும் கூறியதில்லை.

அரசியல்வாதியோ, தொழில் அதிபரோ யாராக இருந்தாலும் அவர் விளையாட்டு வீரராக இருந்திருக்க வேண்டும் என்றார்.

வரும் 21 ஆம் திகதி தொடங்கும் டெஸ்ட் தொடரில் இங்கிலாந்தை அதன் சொந்த மண்ணில் இந்தியா எதிர்கொள்வது கடும் சவாலாக இருக்கும் என்று பலர் கூறி வருகின்றனர். இந்த நிலையில் தன்னம்பிக்கை மிக்க வீரரான கபில்தேவ் கூறியிருக்கும் கருத்து இந்திய வீரர்களுக்கு நிச்சயம் தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் என்று நம்புவோம்.

# இங்கிலாந்தே வெல்லுமாம் ஷேன் வோர்ன் நம்பிக்கை

இந்திய அணியுடனான டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து 1-0 என்ற கணக்கில் வெற்றி பெறும் என்று அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் கூறியுள்ளார்.

இது குறித்து லண்டனில் நேற்று அவர் கூறியதாவது, இங்கிலாந்து அணி தற்போது மிக வலுவாக அமைந்துள்ளது. இந்திய அணியுடனான டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து 1-0 என்ற கணக்கில் வெற்றிபெறும் என நினைக்கிறேன். ஆனால் அந்த வெற்றியை வசப்படுத்த வேண்டுமானால் இங்கிலாந்து வீரர்கள் ஆக்ரோசமாக விளையாடுவது அவசியம். அப்படி விளையாடினால் இந்த தொடர் மிகவும் சுவாரசியமாக இருக்கும். போட்டியைப் பார்ப்பதற்காக ரசிகர்களும் ஏராளமாக குவிவார்கள். அவர்களின் ஆதரவும் இங்கிலாந்து வீரர்களுக்கு புதிய உத்வேகத்தைக் கொடுக்கும்.



இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட முன்வரிசை மிக மிக வலுவாக உள்ளது. டிராம்லெட். அண்டர்சன்,ஸ்டுவர்ட் பிராட் வேகமும் ஸ்வானின் சுழலும் அசத்தலான பந்துவீச்சு கூட்டணியாக உருவெடுத்துள்ளது. குறிப்பாக டிராம்லெட் வேகத்தை சமாளிப்பது இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருக்கும். இவ்வாறு வோர்ன் கூறியுள்ளார்.



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மற்றும் மனோ கணேசன் ஆகியோர் உரையாற்றுவதையும் கூட்டத்தில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# சந்திரிகா, சம்பந்தன், ஹக்கீம் சாட்சியமளிக்க சந்தர்ப்பம் உண்டு

## நல்லிணக்க ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித்தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரின் சாட்சியங்களை வரவேற்கிறது.

எனினும் அவர்கள் சாட்சியமளிக்க முன்வரவில்லை என ஆணைக்குழுவின் செயலாளர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவர்கள் சாட்சியமளிக்க முன்வந்தால் அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ந)

# கனியவள கூட்டுத்தாபனம் முறையாக செயற்படவில்லை

## ஜயலத் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

கனியவள கூட்டுத்தாபனம் எரிபொருள் கொள்வனவு முறைமைக்கு மாறாக செயற்படுவதாக ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன குற்றம் சுமத்தியுள்ளார். இதன் அடிப்படையிலேயே அண்மையில் தன்னிச்சையான முறையில் பெற்றோல் கொள்வனவுகள் இடம்பெற்றதாக தேசிய சேவையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அந்த சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான ஜயலத் ஜெயவர்த்தன இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

தரக்குறைவான பெற்றோல் இறக்குமதிக்கு கனியவளத்துறை அமைச்சர் பொறுப்புக் கூறாவிட்டால் யார் பொறுப்புக் கூறுவது என அவர் கேள்வியெழுப்பியுள்ளார். இதே வேளை தரக்குறைவான பெற்றோல் இறக்குமதி குறித்து தான் பொறுப்பு ஏற்கபோவதில்லை என கனிய வளத்துறை அமைச்சர் நாளிதழ் ஒன்றிற்கு தெரிவித்ததை அடுத்தே இவ்வாறானதொரு கேள்வியையெழுப்ப தீர்மானித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். தற்காலிகமாக போலியான வகையில் எரிபொருள் பற்றாக்குறையொன்றை ஏற்படுத்தி இவ்வாறு தரக்குறைவான எரிபொருள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் இந்தவிடயம் குறித்து செய்திச் சேவையொன்று கனியவளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் கேட்ட போது,

தரங்குறைவான பெற்றோல்இறக்குமதி செய்யப்பட்டமை குறித்து ஆராய மூவர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். (ந)

# அரசின் ஏமாற்று வித்...

இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், எத்தனையோ துன்பங்கள், இடப்பெயர்வுகள், உயிர்ச்சேதம், பொருட்சேதம் ஏற்பட்ட போதும் நாடாளுமன்றத் தேர்தலிலே கிழக்கு மாகாண மக்கள் எம்மை தெரிவு செய்தார்கள். வீட்டிற்கு நேரே வாக்களித்தார்கள்.

ஏன் நீங்களும் அவ்வாறு செய்ய முடியாது? உலகத்தின் அழுத்தங்களிலிருந்து தப்புவதற்கு யாழ்ப்பாண மக்கள் தன்னை பிணை எடுப்பார்கள் என ஜனாதிபதி கனவு காண்கிறார். அதனால் தனது பரிவாரங்களை இங்கு அனுப்பியுள்ளார்.

எட்டுத்தடவைக்கு மேல் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். அரசியல் தீர்வைப் பற்றி அவர்கள் எதனையும் இதுவரை தெளிவாக தெரிவிக்கவில்லை. அரசை நாம் நிர்ப்பந்திக்கின்றோம். அவர்கள் எம்மை ஏமாற்றுகின்றார்கள். இவர்களின் ஏமாற்று வித்தைக்கு நாம் இடமளிக்கக் கூடாது. புலம்பெயர் தமிழ் மக்களின் பலமும் எமக்கு உறுதுணையாக நிற்கிறது. எதற்கும் அஞ்சமாட்டோம். எம்மை எமது மண்ணில் வாழ விடுங்கள். இராணுவமே நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள். இதற்காக நாம் செய்ய வேண்டியது எதிர்வரும் தேர்தலில் சகலரும் வாக்களிக்க வேண்டும் என்றார்.

இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தனது உரையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும்தான் தமிழ் இனத்துக்காக உள்ள ஒரேஒரு கட்சியாகும் ஏனையவையெல்லாம் சிங்கள இனவாதக் கட்சிகளாகும். உலகத்தில் தோல்வியுற்ற அரசாங்கம் உள்ளதெனில் அது இலங்கை அரசாங்கம் தான். சனல் 4, தருஸ்மன் அறிக்கைகளால் திணறிப்போய் இருக்கும் இவ்வரசு, தமிழ்மக்கள் தங்களுடன் உள்ளார்கள் என்பதை காட்டவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளது. அதற்காக இத் தேர்தலை பயன்படுத்த முன்வந்துள்ளனர் என தெரிவித்தார். (ந)

# விளைச்சல் செய்யப்பட...

பொருளாதார அபிவிருத்தி முக்கியமானது. விவசாயத்தின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று எமது இளைஞர்கள் பலர் நெல் விளைச்சலில் ஈடுபடுவதற்கு தயங்குகின்றனர். உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகள் அனைத்தும் கடின உழைப்பின் மூலமே அபிவிருத்தியடைந்தன என கூறிய பிரதமர், தரிசு நிலங்கள் தேசிய விரயமாகும் எனவும் தெரிவித்தார்.




# அமெ. இராஜாங்க செய...

எதிர்வரும் 19ஆம் திகதி புதுடில்லிக்கு விஜயம் செய்யும் அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் கிலாரி, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இச் சந்திப்பில் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் விவகாரம் மட்டுமன்றி இலங்கை விவகாரம் குறித்தும் பிரதமர் மன்மேகன் சிங்குடன் கிலாரி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்ற வளாகத்தில் சனல் 4 தொலைக் காட்சியில் இலங்கையின் கொலைக்களம் எனும் ஆவணப்படம் காட்சிப்படுத்தப்பட்டபின்னர் வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என பெரும்பாலான அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் முழு அளவிலான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என முதற் தடவையாக இந்தியாவும் வலியுறுத்தியுள்ளது.

இந்தியாவின் ஹெட்லைன்ஸ் ருடே தொலைக்காட்சிக்கு செவ்வி வழங்கிய இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் விஷ்ணுபிரகாஸ் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறவேண்டும் என வலியுறுத்தி இருந்தார்.

அத்துடன் இலங்கையில் வாழ்கின்ற சிறுபான்மை இன மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும்வகையில் உண்மையானதும் அர்த்த பூர்வமானதுமான அரசியல் தீர்வை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனவும் அவர் இச் செவ்வியில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந் நிலையில் இலங்கை விவகாரம் குறித்து அமெரிக்காவின் ராஜாங்க அமைச்சார் கிலாரி கிளின்டன், இந்தியப் பிரதமர், மன்மோகன் சிங்குடன் பேச்சு நடத்துவது முக்கியத்துவமானது எனக் கருதப்படுகிறது. (ந)

# உள்ளூராட்சி சபை...

தகைமையைக் கொண்டுள்ளனர்.

20 அரசியல் கட்சிகளும், 72 சுயேட்சைக் குழுக்களும் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றன.

வாக்காளர்கள் தமது வாக்குகளைப் பதிவு செய்வதற்காக இரண்டாயிரத்து 226 வாக்குச் சாவடிகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், கிளிநொச்சியில் தேர்தல் நடவடிக்கைகளை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் தேர்தல்கள் செயலக காரியாலயம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதனிடையே, உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் வாக்களிப்பவர் களுக்காக வாக்காளர் அட்டை விநியோகம் நிறைவடைந்துள்ளதாக அஞ்சல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுவரையில் 80 வீதமான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப் பட்டுள்ளதாக அஞ்சல்மா அதிபர் எம்.கே.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

வாக்காளர் அட்டைகளை இதுவரையில் பெற்றுக்கொள்ள தவறியவர்கள் தமது பிரதேச அஞ்சல் அலுவலகங்களுக்கு சென்று அவற்றை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந)

# பெண்ணை...

ஹற்றனைச் சேர்ந்த என்.சத்தியன் (வயது 28) என்பவரே சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் உயிரிழந்தார்.

இவரின் சடலம் பிரேத பரிசோதனை முடிபடைந்த நிலையில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவதற்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ந-4,6)

# ஜனாதிபதி...

விஜயம் செய்யும் ஜனாதிபதி வேலணைக்குச் செல்வார் என்றும் நாளை மறுதினம் 20ஆம் திகதி கிளிநொச்சியில் சர்வதேச விளையாட்டு மைதானத்திற்கான பூர்வாங்க வேலையை தொடக்கி வைப்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.